


32ஆவது ஆண்டில்
# விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
Tel: 416-282-8059
email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com




நதி: 32 பாலம்: 07 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | APRIL 01, 2022

# நேட்டோ தலைவர்களின் விசேட உச்சி மாநாடு

பல தசாப்தங்களுக்குப் பிறகு யூரோ-அட்லாண்டிக் பகுதியின் பாதுகாப்பிற்கு மிகப்பெரிய அச்சுறுத்தலாக ஏற்பட்டிருக்கும் உக்ரைனுக்கு எதிரான ரஷ்யாவின் ஆக்கிரமிப்புப் பற்றி ஆராய, 30 நேட்டோ (NATO) நட்பு நாடுகளின் அரச தலைவர்களும் ஒரு விசேட உச்சி மாநாடு நடத்துவதற்காக 2022 மார்ச் 24இல் பெல்ஜியத்தில் உள்ள Brusselsஇல் இருக்கும் நேட்டோவினுடைய தலைமையகத்தில் நேரில் கூடினர்.

அங்கு அவர்கள் விடுத்த அறிக்கையில், “உக்ரைனுக்கு எதிரான ரஷ்யாவின் போர் ஐரோப்பாவில் அமைதியைக் குலைத்துள்ளது. மற்றும் மனித துன்பங்களையும், அழிவையும் ஏற்படுத்துகிறது. உக்ரைன் மீதான ரஷ்யாவின் ஆக்கிரமிப்பை நாங்கள் கடுமையாகக் கண்டிக்கிறோம். ஐக்கிய நாடுகள் பொதுச்சபையில் 2022 மார்ச் 02இல் நிறைவேற்றப்பட்ட உக்ரைனுக்கு எதிரான ஆக்கிரமிப்புத் தீர்மானத்திற்கு இணங்க இந்தப் போரை உடனடியாக நிறுத்தி, உக்ரைனில் இருந்து இராணுவப்படைகளைத் திரும்பப் பெறமாறு, ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் இடம் கேட்டுக் கொள்கிறோம். உக்ரைன் மீதான ரஷ்யாவின் தாக்குதல் உலக பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துகிறது. சர்வதேச நெறிமுறைகளை மீறி நடக்கும் இத்தாக்குதல்கள் உலகத்தைப் பாதுகாப்பற்ற நிலைக்குத் தள்ளுகிறது.

பெண்கள், குழந்தைகள் மற்றும் பாதிக்கப்படக் கூடிய சூழ்நிலைகளில் உள்ளோர் உட்பட பொதுமக்கள் மீதான ரஷ்யாவின் அழிவுகரமான தாக்குதல்களை நாங்கள் கடுமையாகக் கண்டிக்கிறோம். போர்க் குற்றங்கள், மனிதாபிமான மற்றும் சர்வதேச சட்ட மீறல்களுக்குப் பொறுப்பானவர்களை அவர்களது நடவடிக்கைகளுக்குப் பொறுப்பேற்கவைக்க சர்வதேச சமூகத்துடன் இணைந்து பணியாற்றுவோம். பொதுமக்களுக்கு விரைவாக, பாதுகாப்பாக, தடைகள் அற்ற மனிதாபிமான உதவிகளை வழங்க பாதை அமைத்துக் கொடுக்குமாறு ரஷ்யாவை நாங்கள் கேட்டுக் கொள்கிறோம். முற்றுகையிடப்பட்ட நகரங்களுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்க அனுமதிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.



இரசாயன அல்லது உயிரியல் ஆயுதத்தை ரஷ்யா பயன்படுத்தினால் அதை ஏற்றுக் கொள்ளமுடியாது. அது கடுமையான பின் விளைவுகளை (Consequences) ஏற்படுத்தும் என எச்சரிக்கிறோம். ரஷ்யாவின் கொடூரமான இந்த ஆக்கிரமிப்புப் போருக்கு எதிராக உக்ரேனிய வீரர்களின் தீவிரமான, தேச அபிமானத்துடன், சளைக்காமல் தொடர்ந்து போரிடும் ஆற்றல் உலகை மெச்ச வைத்துள்ளது. சமாதானத்தை அடைவதற்காக உக்ரைன் எடுக்கும் முயற்சிகளை நாங்கள் ஆதரிக்கிறோம். போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கும் மனித துன்பங்களைப் போக்குவதற்கும் நேச நாடுகளால் ரஷ்யாவுடன் மேற்கொள்ளப்பட்டு வரும் இராஜதந்திர ரீதியிலான முயற்சிகளை ஆதரிக்கிறோம்.

ரஷ்யா உடனடியாக போர் நிறுத்தத்தை அமல்படுத்தி பேச்சுவார்த்தைகளில் தீவிரம் காட்டவேண்டும் என்றும், உறுதியான முடிவுகளை அடைய உக்ரைனுடன் நம்பகமான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட வேண்டும் எனவும் நாங்கள் ரஷ்யாவை அழைக்கிறோம். ஒரு நிலையான போர் நிறுத்தத்தை ஏற்படுத்தி உக்ரைன் பிரதேசத்தில் இருந்து தனது துருப்புக்களை ரஷ்யா முழுமையாகத் திரும்பப் பெற வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கிறோம்.

ஐக்கிய நாடுகளின் சாசனத்தில் குறிப்பிட்டுள்ள இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாடு உள்ளிட்ட சர்வதேச ஒழுங்கை நிலைநிறுத்தவும், ரஷ்யாவின் போர்முயற்சியை எந்தவகையிலும் ஆதரிப்பதைத் தவிர்க்கவும், ரஷ்யாவின் மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடைகளை மீற உதவும் எந்தவொரு செயலையும் தவிர்க்கவும், சீன மக்கள் குடியரசு உட்பட உலகில் உள்ள அனைத்து நாடுகளையும் நாங்கள் கேட்டுக் கொள்கிறோம்.

ஐக்கிய நாடுகள் சாசனத்தின் கீழ் தற்காப்பிற்கான அடிப்படை உரிமை உக்ரைனுக்கு உண்டு. உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி, உக்ரைன் அரசாங்கம் மற்றும் தங்கள் தாயகத்தைப் பாதுகாக்கும் துணிச்சலான உக்ரேனிய குடிமக்களுடன் நாங்கள் முழு ஒற்றுமையுடனும், உறுதுணையாகவும் இருக்கிறோம். ரஷ்யாவின் ஆக்கிரமிப்பால் கொல்லப்பட்டோர், காயமடைந்தோர், இடம்பெயர்ந்தோர் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு எமது மரியாதையை நாங்கள் செலுத்தி அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஐரோப்பிய மற்றும் உலகளாவிய பாதுகாப்பிற்கு அடித்தளமாக இருக்கும்

தொடர்ச்சி 02ஆம் பக்கம்...)




























# நேட்டோ...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

அடிப்படைக் கொள்கைகளுக்கு நாங்கள் உறுதியாக இருக்கிறோம். இதில் ஒவ்வொரு நாட்டிற்கும் வெளிநாடுகளின் குறுக்கீடு இல்லாமல் அதன் சொந்த பாதுகாப்பு ஏற்பாடுகளைத் தேர்ந்தெடுக்க உரிமை உண்டு. எங்கள் நேசநாட்டு மக்கள் மற்றும் நேசநாடுகளின் ஒவ்வொரு அங்குலப் பிரதேசத்தையும் பாதுகாப்பதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் நாங்கள் தொடர்ந்து எடுப்போம். ரஷ்யாவின் நடவடிக்கைகளுக்குப் பதில் அளிக்கும் விதமாக நாங்கள் நேட்டோவின் பாதுகாப்புத் திட்டங்களைச் செயல்படுத்தி நேட்டோ பதிலளிப்புப் படையின் (NATO Respose Force) அணியைத் தயார் நிலையில் நிறுத்தி உள்ளோம். இதில் நேட்டோவின் நேரடிக் கட்டளையின் கீழ் வான் மற்றும் கடற்படை உபகரணங்களுடன் 40,000 துருப்புகளை எமது கிழக்கு எல்லைப் பகுதியில் தயார்நிலையில் வைத்துள்ளோம். மேலும் பல்கேரியா, ஹங்கேரி, ரூமேனியா மற்றும் ஸ்லோவாக்கியா ஆகிய நாடுகளில் நான்கு மேலதிகமாகப் பன்னாட்டுப் போர்ப்படை அணிகளை நிற்பாட்டுகிறோம். இவை ஏற்கனவே எமது போர்ப்படை அணிகள் உள்ள நாடுகளான எஸ்டோனியா, லாட்வியா, லிதுவேனியா மற்றும் போலந்தில் உள்ள பன்னாட்டுப் போர்ப்படை அணிகளைவிட மேலதிகமாக வரவழைக்கப்பட்டுள்ள போர்ப்படை அணிகளாகும். எனவே இப்போது எமது கிழக்கு எல்லைப் பகுதியில் எட்டு பன்னாட்டுப் போர்ப்படை அணிகள் பால்ரிக் கடல் (Baltic Sea) முதல் கருங்கடல் (Black Sea) பகுதிவரையில் எமது நேட்டோ உறுப்பு நாடுகளைப் பாதுகாக்கத் தயார்நிலையில் இருக்கிறது.



எங்களது நேட்டோ கூட்டணி மற்றும் யூரோ - அட்லாண்டிக் பகுதிகளின் பாதுகாப்பை உறுதி செய்ய நாங்கள் எடுக்கும் நடவடிக்கைகளுக்குப் போதுமான நேட்டோ பதிலளிப்புப் படையணியும் போர் உபகரணங்களும் தற்போது தயாராக உள்ளன.

எங்களது நேட்டோ கூட்டணி நாடுகள் தங்கள் பாதுகாப்பு செலவினங்களை கணிசமான அளவு அதிகரித்து வருகின்றன. இன்று பாதுகாப்பு முதலீட்டு உறுதிமொழியை முழுமையாக நிறைவேற்றுவதற்கான எங்கள் முயற்சிகளை விரைவுப்படுத்த முடிவு செய்துள்ளோம். எமது நேட்டோ உடன்படிக்கையில் உள்ளமாதிரி அனைத்துவகையான எதிரித்தாக்குதல்களையும் எதிர்க்கும் எங்கள் நாடுகளின் தனிப்பட்ட மற்றும் கூட்டுப்படைகளின் திறனை மேலும் வலுப்படுத்துவோம்" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாநாடு முடிவுற்ற பின்னர் நேட்டோவின் பொதுச் செயலாளர் Jens Stoltenberg ஊடக மாநாடு ஒன்றை நடத்தினார். அதில் அவர், "எமது தலைமுறையில் நமது பாதுகாப்பிற்கு ஏற்பட்ட அச்சுறுத்தலை எதிர்கொள்ள நேட்டோ நாடுகளின் தலைவர்கள் கூட்டியிருந்த விசேட உச்சி மாநாடு முடிவடைந்து விட்டது. உக்ரைன் மக்கள் தைரியத்துடனும், உறுதியுடனும் ரஷ்ய ஆக்கிரமிப்பை எதிர்த்து வருகின்றனர். அவர்கள் சுதந்திரத்திற்காகவும் ஒரு வளமான எதிர்காலத்திற்காகவும் போராடுகின்றனர். நாங்கள் அவர்களுடன் அவர்களுக்கு உறுதுணையாக இருக்கிறோம்" என்றார். அவர் மேலும் மத்திய தரைக்கடலில் அமெரிக்க வான் மற்றும் கடற்படைகளுடன் தயார் நிலையில் இருக்கும் விமானம் தாங்கி கப்பலான ஐந்து நாசகாரிக் கப்பல்களையும் அதில் உள்ள அமெரிக்காவின் 'Carrier Srike Group' படையணியைப் பற்றியும் விபரித்தார். அத்துடன் அன்றைய தினம் நேட்டோ நாடுகளின் தலைவர்கள் சீனாவை ரஷ்யாவின் போர் முயற்சிக்கு ஆதரவளிப்பதை தவிர்க்குமாறு கேட்டதைப் பற்றியும் கூறினார். மேலும் மாநாட்டில் நேட்டோ தலைவர்கள் 2014இல் எடுத்த பாதுகாப்பு செலவினங்களுக்குத் தங்களது நாடுகளின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் (GDP) 2%ஐ முதலிடுவது என்ற உறுதிமொழியை நிறைவேற்றுவதற்கான முயற்சிகளை தீவிரப்படுத்த ஒத்துக் கொண்டதையும் கூறினார்.

தற்போது கனடாவின் GDPயின் 1.39%ஐயே பாதுகாப்புச் செலவினங்களுக்குக் கனடா முதலிடுவது குறிப்பிடத்தக்கது. அதுவே கிட்டத்தட்ட $30 பில்லியன் வருடாந்த முதலீடு ஆகும். கனடா நேட்டோவில் அளித்த உறுதிமொழியை நிறைவேற்ற அதாவது GDPயில் 2%ஐ பாதுகாப்புச் செலவினங்களுக்கு முதலிட வேண்டுமாயின் அது கிட்டத்தட்ட $46 பில்லியனை வருடாந்தம் முதலீடு செய்ய வேண்டும் என CTV ஊடகம் தெரிவிக்கிறது.

ஊடகவியலாளர் மாநாட்டில் பல்வேறு சர்வதேச ஊடகங்களின் கேள்விகளுக்கு நேட்டோவின் பொதுச் செயலாளர் பதிலளித்தார்.

CNN மற்றும் Financial Times ஊடகங்களின் நிருபர்கள் திரும்பத் திரும்பக் கேட்ட, "இரசாயனம், உயிரியல், கதிரியக்க மற்றும் அணுசக்தி ஆயுதங்களின் அச்சுறுத்தலுக்கான தயார் நிலையை ஏற்படுத்த நேசநாடுகள் ஒப்புக்கொள்கின்றன என அறிக்கையில் தெரிவித்துள்ளீர்கள். இது நம்பத் தகுந்த உளவுத் துறையின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டதா?" என்ற கேள்விக்குப் பொதுச்செயலாளர் பதிலளித்தார். அதில் அவர், "உக்ரைன், அமெரிக்கா, நேட்டோ நட்பு நாடுகள் இரசாயனம் மற்றும்

தொடர்ச்சி 09ஆம் பக்கம்...)


Available Till Midnight
Including Weekends & Holidays
ANTON
DHARMASEELAN
MORTGAE AGENT
#1 Mortgage Agent in GTA
#2 in Canada
CALL ME FIRST
FOR ALL YOUR MORTGAGE NEEDS
PURCHASE
REFINANCE
SELF EMPLOYED
BAD CREDIT
INVESTMENT PROPERTY
RENEWAL
MAJOR BANKS
ALTERNATIVE LENDERS
B LENDERS
CREDIT UNIONS
TRUST COMPANIES
PRIVATE LENDERS
416 704 1200
anton@myhomemls.ca
MORTGAGE ALLIANCE
Broker # 10530
FAX: 1 866 566 3068

# நாமும் நமது இல்லமும் 604

## ஆதன விலை அதிகரிப்பு பணவீக்கத்தால் பாதிக்குமா?



ராஜா மகேந்திரன், P.Eng.
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969

பணவீக்கத்தின் அதிகரிப்பு ஆதன விலையின் அதிகரிப்பை பாதிக்குமா அல்லது பாதிக்காதா?

இவற்றை இரண்டு வகைகளில் ஆராய முடியும். பணவீக்கம் ஆதன விலைக்கு எவ்வாறு அனுகூலமாக இருக்கலாம் அல்லது எவ்வாறு எதிர்வினையை ஆற்றலாம்.

பணவீக்கம் ஆதன விலை அதிகரிப்பிற்கான அனுகூலங்கள்:
* 1973 மற்றும் 1979 காலங்களில் பொருளாதாரத்தடை (Oil Embarg) ஏற்பட்டது. முதலாவது மத்திய கிழக்கில் நடைபெற்ற Yom – Kippur War இரண்டாவது 1979இல் ஈரானில் ஏற்பட்ட புரட்சி (Revolution) ஆகும். இதனால் ஒயிலின் (Oil) விலை அதிகரித்தது. இதனால் பணவீக்கம் ஏற்பட்டது. குறிப்பாக ஒயிலில் தங்கியிருந்த மேற்கத்திய நாடுகளின் பணவீக்கம் அதிகரித்தது. அதே நிலைமை இன்றும் (2021/2022) காணலாம்.

* போதியளவு ஆதனங்கள் சந்தைப் படுத்தப்படுவதில்லை. தாம் குடியிருக்கும் ஆதனத்தை விற்றால் வாங்குவது கடினம் என்பதால் விற்பனை குறைகின்றது. சந்தைப்படுத்தல் குறைந்துள்ளது.
* இன்று போதியளவு தகவல் தொழில் நுட்ப வாய்ப்புகள் காணப்படுகின்றன.
* சம்பளம் கூடிய தொழில்வாய்ப்புகள் இருப்பதால், ஆதனம் வாங்கக் கூடியோர் ஆதன சந்தையில் காணப்படுகின்றனர்.
* புதிய வரவாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படுகின்றது.
* வட்டி வீதம் அதிகரித்தாலும், பெற்றோரின் ஆரம்ப முதலீடு வாங்கு வோரிற்கு உதவி செய்கின்றது. இதனால் அடமானக் கடன்தொகை குறைகின்றது.
* பணவீக்கம் அதிகரிக்கின்றது, வருமானம் அதிகரிக்கின்றது. ஐந்து (5) வருட மாறாத அடமான வட்டி வீதம் இன்றும் குறைவாகவே காணப்படுகின்றது.
* வட்டிவீத அதிகரிப்பு, இதனால் ஆதனம் நிர்மாணம் செய்வோர் தமது நிர்மாணத்தைக் குறைத்தால், ஏற்கனவே இருக்கும் வீடுகளின் விலை அதிகரிக்கும்.
* பணவீக்கம் ஆதன விலையில் ஏற்படுத்தும் பாதிப்புகள்.
* பண வீக்கத்துடன் ஒப்பிடும்போது, வட்டி வீதம் மிகக் குறைவு. எனினும் 5 வருடத் திற்குரிய மாறாத வட்டி வீதம் 2%இற்கு மேலாக சென்றுவிட்டது. குறிப்பிட்ட காலத்திற்கு 2% என்ற பெறுமானத்திற்குத் திரும்பாது.
* மார்ச் 1988இல் முதன்மை வட்டிவீதம் 5%இற்கு இரு ஆண்டுகளில் அதிகரிக்கப் பட்டது. (2022இன் ஆரம்பத்தில் முதன்மை வட்டிவீதம் 2.45%) 1% வட்டி அதிகரிப்பு ஏற்பட்டாலும் வாங்குவோரின் எண்ணிக்கை கணிசமாகக் குறையலாம். இதற்கு காரணம் 1988இன் ஆரம்பத்தில் சராசரி விலை $200,000. 2021இன் இறுதியில் சராசரி விலை $1,100,000. ஒவ்வொரு 0.25% அதிகரிப்பும் வாங்குவோரின் அட மானம் பெறும் தகுதியைக் குறைக்கும்.
* வட்டிவீத அதிகரிப்பு தொழில் கொடுப் போரின் எண்ணிக்கையை குறைக்கும். அத்துடன் 1.5% அதிகரிப்பு பொருளாதார இறுக்கத்தை (Recession) ஏற்படுத்தலாம்?
* ஆதன முதலீட்டாளர்களின் (Investors) மாதாந்த வருமானம் (Rent) அடமானக் கடனை செலுத்துவதற்கே போதாமல் இருக்கலாம். இதனால், ஆதன முதலீட்டா ளர்கள் சந்தையிலிருந்து வெளியேறலாம்.
* ஏற்கனவே வெளிநாட்டவர்கள் கனடா வில் ஆதனம் வாங்குவதற்குப் பலவித மான புதிய வரிகள் அறவிடப்படுகின்றது. புதிய வரிகளும் எதிர்பார்க்கப்படுகின்றது (?)
* ஒன்ராறியோவின் பல பகுதிகளிலும் விலை அதிகரித்தே வருகின்றது. அத்துடன் கட்டிடப் பொருட்களின் விலை, நிலத்தின் விலை, தொழிலாளர்களின் சம்பளம், உள்ளூராட்சி, நகராட்சி, மாநகராட்சி போன்றவற்றின் வரிகளும் அதிகரிப்பதால் நிர்மாணம் செய்யப்படும் வீடு மற்றும் மனைகளின் விலை அதிகரித்தே செல்ல வேண்டிய நிலைமை ஏற்படும்.
* அதிக விலை அதிகரிப்பு, வாங்கு வோரிற்கு அனுகூலமாக இருக்காது.

பணவீக்கம் அதிகரிப்பு, வட்டிவீதம் அதிகரிப்பு நன்மை மற்றும் தீமை இரண்டையும் கொண்டுள்ளது. 1970களில் நடந்ததிற்கும் 2022இல் நடப்பதற்கும் தொடர்பைக் காணக்கூடியதாக உள்ளது. எவ்வாறு ஆதனவிலையில் மாற்றம்



ஏற்படும் என்பது (i) எவ்வளவு வேகமாக, எத்தனை வீதம் வட்டி அதிகரிப்பு (ii) ரஷ்யா-உக்ரைன் இன் போர் எவ்வளவு காலம் தொடரும் இதன் தொடர்ச்சியாக ஒயிலின் விலையின் அதிகரிப்பு (iii) பணவீக்கத்தின் அதிகரிப்பு (iv) தொழில் வாய்ப்பு (v) கோவிட்-19இன் புதிய பாதிப்பு (New Variant) (vi) உலகளாவிய பொருளாதார நிலைமை போன்ற காரணிகளே ஆதன வியாபாரத்தை நிர்ணயிக்கும்.

அண்மையில் புரிந்துணர்வு செய்து கொண்ட லிபரல் மற்றும் என்டிபி (NDP) கட்சிகளின் புதிய பொருளாதாரக் கொள்கை மிகவும் முக்கிய பங்கை கனடியப் பொருளாதாரத்தில் ஏற்படுத்தும். இதன் தொடர்ச்சியாக ஆதன விலையிலும், வியாபாரத்திலும் எவ்வாறு மாற்றங்கள் ஏற்படும் என தெரியவரும்.




Mahindan Mailvaganam, B.Sc., M.Sc.
Senior Insurance Specialist
Elite Field Sales Advisor
RBC Insurance
WOODSIDE SQUARE MALL (McCowan & Finch)
1571 Sandhurst Circle
Scarborough, ON M1V 1V2
mahindan.mailvaganam@rbc.com
Cell: 416-262-4973

- Universal Life Insurance
- Term (10 to 40 years) Insurance
- Term 100
- Non Medical Insurance
- Critical Illness Insurance
- Disability Insurance
- Travel Insurance
- RRSP
- TFSA

உங்கள் வாகனத்தின் மாதாந்த காப்புறுதி கட்டணம் அதிகரிக்கப்பட்டிருந்தால் எமது காப்புறுதி ஆலோசகர்களால் உங்களுக்கு உதவ முடியும்!

RBC Insurance
Life | Health | Auto | Home | Travel | Wealth


## கூட்டமைப்பு...

06ஆம் பக்கத்தொடர்ச்சி

கவனத்தில் எடுக்கும் என்று நம்ப முடியாது. ஆனால், இந்தியாவின் அழுத்தங்களும் இருப்பதால் சிலவற்றை நடைமுறைப்படுத்தலாம் என்று தெரிகின்றது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஸ இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் ஊடாகத் தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கு முக்கிய செய்தி ஒன்றை அனுப்பி வைத்ததாகவும் தகவல் ஒன்று வெளியாகியுள்ளது.

இந்திய வெளிவிவகார அமைச்சருக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளுக்கும் இடையில் நடைபெற்ற விசேட பேச்சுவார்த்தையின் போது ஜனாதிபதியின் செய்தியை இந்திய வெளிவிவகார அமைச்சர், தமிழ் தேசியக் கூட்டமைப்பிடம் கூறியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கூட்டமைப்பிற்கும் ஜனாதிபதிக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது, ஜனாதிபதி வழங்கிய ஐந்து வாக்குறுதிகளைக் கட்டாயம் நிறைவேற்றுவதாகவும், அது குறித்து நம்பிக்கை கொள்ளுமாறு ஜனாதிபதி இந்திய வெளிவிவகார அமைச்சரின்



ஊடாகக் கூட்டமைப்பிற்கு அறிவித்துள்ளதாகவும் தெரியவருகிறது. என்ன நடக்கின்றது என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

# MORTGAGE & LINE OF CREDIT

⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் ( OAC*)

⇒ லைன் ஒப் கிரெடிட்(HELOC - No Income Required*)

⇒ **Private Mortgage** (No Income Verification)

⇒ ரீபைனான்ஸ்,Title Transfer, ரினிவல்

⇒ 2வது, 3வது மோட்கேஜ் (Funded within 48hrs)

⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கான மோர்ட்கேஜ்

⇒ எல்லா கடனையும் ஒரே பேமென்டாக்க

⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட

**கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல்**
**வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?**

MORTGAGE CLINIC



**ஜெ(Jey)இராசதுரை**
MBA. BBA (Hon) AMP

Team Leader / Mortgage
& Real Estate Broker

**Cell : 416-624- 4843**



www.mortgageclinicanada.com
416-613-2788 / 416-816-9011

RIGHT AT HOME REALTY INC.

எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530

Brokerage: 1396 Don Mills Rd, Unit B121Toronto ON M3B 0A7 Corp office : 200-2005 Sheppard Ave E, Toronto ON M2J 5B4

# NOTARY PUBLIC & LEGAL SERVICES

**Notarizations, Certifications & Commissioning**

* Affidavits
* Certification of True Copy
* Preparation and Notarize the Letter of Invitation
* Commissioning Statutory Declarations and Solemn Affirmations
* Power Of Attorney & Will

* Small Claims
* Landlord & Tenant Matters
* Business Registration & Renewal

AAA Legal Services

AAA LEGAL SERVICES
PROFESSIONAL CORPORATION

**Call:(416) 814 -7450**
(Markham Rd & HWY 401 - Scarborough)

** Promotional Rate for students $20per sign

# கூட்டமைப்பு - ஜனாதிபதி சந்திப்பு




தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஸவை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளது. அதற்கு முன்னதாக அரசாங்கம் கூட்டிய சர்வகட்சி மாநாட்டிலும் பங்கேற்றுள்ளது. இதனை வழமை போலவே சில தரப்பினர் விமர்சித்துள்ளனர்.

சர்வகட்சி மாநாட்டை நாட்டின் எதிர்க் கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி புறக் கணித்திருந்தது. வேறு சில கட்சிகளும் புறக்கணித்திருந்தன. இந்நிலையில், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் இதில் கலந்துகொள்வதெனத் தீர்மானித்தார். நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்காகவென ஜனாதிபதியால் அழைப்பு விடுக்கப்பட்ட சர்வகட்சி மாநாட்டில் அரசியல் உள்நோக்கங்கள் இருப்பதாகத் தெரிவித்து, ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி, தமிழ் முற்போக்குக் கூட்டணி, சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உள்ளிட்ட பல கட்சிகள் மாநாட்டை புறக்கணித்தன.

சிறீலங்கா பொதுஜன பெரமுன, ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட 26 கட்சிகளின் பிரதிநிதிகள் இதில் கலந்துகொண்டனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்குக் கோட்டாபய அரசாங்கத்தின் முறையற்ற நிர்வாகமே காரணம் என எதிர்கட்சிகள் குற்றம் சாட்டி வருகின்ற நிலையில், அக்கட்சிகள் பொதுமக்களைத் திரட்டி ஆர்ப்பாட்டங்களையும் மேற் கொண்டு வருகின்றன. ஆனால், இன்றைய நெருக்கடி தவிர்க்க முடியாதது என்பதைக் காண்பிப்பதற்காகவே சர்வகட்சி மாநாட்டை அரசாங்கம் கூட்டுகின்றதென்ற குற்றச்சாட்டை எதிர்க்கட்சியினர் முன்வைத்தனர்.

இந்த மாநாட்டில் கலந்துகொண்ட முன்னாள் பிரதமரும், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்ரம சிங்க உரையாடிய விடயங்கள் நேர்த்தியானதாகவும், அரசாங்கம் அவரது சில கருத்துக்களுக்குப் பதிலளிக்க முடியாமல் இருந்தமையும் குறிப்பிடத்தக்கது. இதனால், ஐக்கிய மக்கள் சக்தி ஜே.வி.பி போன்ற கட்சிகளும் இதில் கலந்து கொண்டு தங்கள் கருத்துக்களை வெளிப் படுத்திருக்கலாம் என்றே கூறத்தோன்று கின்றது. இதனால், தமிழ் தேசியக் கூட்டமைப்பு சர்வகட்சி மாநாட்டில் கலந்து கொண்டமையை ஏனைய தமிழ் கட்சிகள் தவறாக விமர்சிக்க முடியாது.

அரசாங்கத்தில் பங்காளியாக இருந்து, அமைச்சர் பதவியிலிருந்து நீக்கப்பட்ட உதய கம்மன்பில மற்றும், தேசிய சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த சமரவீர போன்றோர் தெரிவித்துள்ள கருத்துக்களை இங்கு குறிப்பிடுவது பொருத்தமானதாகவிருக்கும். புலிகளால் துப்பாக்கி மூலம் பெற முடியாமல் போனதை, அரசியல் ஆயுதம் மூலம் பெறுவதற்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பு முயற்சிக்கின்றது என உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

சர்வகட்சி மாநாட்டில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு பங்கேற்றதில் உள்நோக்கம் இருக்கின்றது எனவும், தற்போதைய நெருக்கடி நிலைமையைப் பயன்படுத்தி தமது இலக்கை அடைவதற்குக் கூட்ட மைப்பினர் முற்படுகின்றனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் நிலவும் நெருக்கடியான சூழ் நிலைக்கு மத்தியில் ஆபத்தான அரசியல் பொறியை வைக்கப் புலம்பெயர் தமிழர்கள் முயன்று வருவதாகத் தேசிய சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த சமரவீர தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களிலும் நாட்டைப் பிளவு படுத்துவதற்குப் புலம்பெயர் தமிழர்களால் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாக வும் சமரவீர கூறுகின்றார். புலம்பெயர்ந்த தமிழர்களின் நிகழ்ச்சி நிரலின் அடிப் படையில்தான் தமிழ் தேசியக் கூட்டமைப்பு செயற்படுகின்றது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் என்றுமில்லாதவாறு பொருளாதார நெருக்கடிகளால் மக்கள் பாதிப்படைந்து வரும் நிலையிலும் சிங்கள அரசியல் வாதிகளின் இனவாத சிந்தனையில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை என்பது தெரிகின்றது.

அடுத்ததாக, தமிழ் தேசியக் கூட்டமைப் பினர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஸ வை தனிப்பட்ட முறையில் சந்தித்துப் பேச்சுவார்த்தை ஒன்றை மேற் கொண்டுள் ளனர். இதுவும் தமிழ் கட்சிகளினால் விமர் சிக்கப்படுகின்றது. தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்துக் கலந்துரையாடு வதற்காகத் தமிழ் தேசியக் கூட்டமைப்பு நீண்ட காலமாக ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்து வந்தது. குறிப்பாக கடந்த வருடமே இந்த கோரிக்கை முன் வைக்கப்பட்டது. ஆனால், ஜனாதிபதி அதற்கு இவ்வளவு காலமும் பதிலளிக்க வில்லை. சர்வகட்சி மாநாட்டில் கூட்ட மைப்பு கலந்து கொண்டதையடுத்து இத்தனிப்பட்ட சந்திப்பிற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஸ அழைப்பு விடுத்திருந்தார். இந்த சந்திப்பில் என்னென்ன விடயங்கள் பேசப்பட்டன என்பது குறித்து தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் விளக்கமளித்துள்ளார்.



தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு தொடர்பாக கலந்தாலோசிக்கவே தாங்கள் விசேடமாக இச்சந்திப்பில் கலந்து கொண்டதாக அவர் தெரிவித்துள்ளார். “அரசமைப்பின் ஊடாக இந்தப் பிரச்சினை களுக்குத் தீர்வுக் காணப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளோம். இதில் கலந்து கொண்டிருந்த அமைச்சர் ஜி.எல். பீரிஸ், அரசமைப்பு தொடர்பாக ஜனாதிபதி யால் நியமிக்கப்பட்ட நிபுணர்களின் அறிக்கை கிடைத்துள்ளதாகவும், இது சிங்களம் மற்றும் தமிழ் மொழியில் மொழி பெயர்க்கப்பட்டு அறிக்கை கிடைத்தவுடன், அடுத்த கட்டப் பேச்சுவார்த்தையை கூட்டமைப்புடன் நடத்துவோம் என்று தெரி வித்திருந்தார். அத்தோடு, எமது அடுத்த கட்டப் பேச்சுவார்த்தைக்கு முன்னர் மேற் கொள்ள வேண்டிய முக்கியமான விடயங்கள் தொடர்பாக ஜனாதிபதி உள்ளிட்டவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்தோம். இதில் நான்கு விடயங்களில் இப்போது உடன்பாடும் எட்டப்பட்டுள்ளது. அந்த வகையில், பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் நீண்ட காலமாகத் தடுத்து வைக்கப் பட்டுள்ள அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும் எனக் கேட்டுக் கொண்டிருந்தோம்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை திருத்தும் அரசாங்கத்தின் நடவடிக்கைக்கு இணங்க, இதனை மேற்கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்திருந்தோம். மேலும், நீண்ட காலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை விடுதலை செய்வது தொடர்பாக நீதி அமைச்சரும் நானும் இணைந்து, சட்ட ஏற்பாடுகள் தொடர்பாக ஜனாதிபதியிடம் விளக்கவும் தீர்மானித்துள் ளோம். இதனை நாம் அடுத்த சில நாட்களில் மேற்கொள்வோம். அடுத்ததாக காணிப் பிரச்சினை தொடர்பாகப் பேசினோம். அதாவது, வடக்கு- கிழக்கில் இனப் பரம்பலை மாற்றியமைக்கும் நோக்கில் மேற்கொள்ளப்படும் இந்த நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள் ளோம். அத்தோடு, தொல்பொருள் அகழ் வாராய்ச்சி எனும் பெயரில் இடம்பெறும் நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள் ளோம். நீண்ட காலமாகப் பயிர்செய்கை யில் ஈடுபடுபவோருக்கு இடையூறுகளை விளைவிக்காமல், அவர்களை அதனை மேற்கொள்ள அனுமதிக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டுள்ளோம். அதே நேரம், காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் தொடர்பாக கருத்து வெளியிட்ட நாம், பாதிக்கப்பட்ட உறவுகளுக்கு ஒரு இலட்சம் ரூபாய் இழப்பீடானது அவர் களுக்கான தீர்வாக அமையாது என்றும், மாறாக இது தொடர்பாக முழுமையான விசாரணையை ஆரம்பிக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளோம்.

நான்காவது விடயமாக, விசேட நிதித் தொகையொன்றை வடக்கு- கிழக்கு பகுதி அபிவிருத்திகளுக்கு ஒதுக்க வேண்டும் எனவும், புலம்பெயர் தமிழர்களின் முதலீடு களை நாட்டுக்குள் ஊக்குவிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டோம்.

எமது இந்தக் கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டுள்ள அரசாங்கம் இவற்றை மேற் கொள்ள நடவடிக்கை எடுப்பதாக எம்மிடம் உறுதியளித்துள்ளது. புதிய அரசமைப்பு ஊடாக தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வையும் கோரியுள்ளோம். அதற்கான நடவடிக்கை இன்னும் இரண்டு மாதங்களில் இடம்பெறும் என அரசாங்கம் உறுதியளித்துள்ளது” என சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

இச்சந்திப்பில் தமிழ் தேசியக் கூட்ட மைப்பினர் முன்வைத்துள்ள அனைத்து கோரிக்கைகளையும் அரசாங்கம்

தொடர்ச்சி 04ஆம் பக்கம்...)

விளம்பரம்
VLAMBARAM
32ஆவது ஆண்டில்
பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலக பொறுப்பாளர்: பிரசாந்தி அருள்தாசன்
பதிப்பு: Canyon Press Inc.

‘விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்’ நிறுவனத்தால் வெளியிடப்படும் ‘விளம்பரம்’ பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059/ FAX: 416-286-0344
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com

Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved

MATH & PHYSICS TUTORING
By a well-qualified and experienced teacher
For all grades from Grade 4 to 1st year of university
Special classes
Advanced function
Calculus & vectors
Data management
All Classes available in Scarborough & Stouffville




Contact: 647.340.9490 / 416.732.2228

# கடன்களை பெறுவதால் மாத்திரம் நெருக்கடியை தீர்க்க முடியுமா?

**- விகிர்தன் -**

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள பாரிய பொருளாதார நெருக்கடிகளை சமாளிக்க சர்வதேச நாடுகளிடம் கடன் பெறுவது ஒன்றே வழி என்பதாக அரசாங்கம் கடன்களைப் பெற்று வருகின்றது. முக்கியமாக இந்தியா, அமெரிக்கா, சீனா ஆகிய நாடுகளிடம் தொடர்ச்சியாக கடன்களைப் பெற்று வருவதோடு, வேறு சில நாடுகளை நோக்கியும் அரசாங்கம் கையேந்தியுள்ளது.



நாட்டின் இன்றைய நெருக்கடி நிலையை கடன்களைக்கொண்டு சீர்படுத்த முடியுமா என்கின்ற கேள்விகள் எழுகின்றன. எனினும், கடன் பெறுவதை தவிர வேறு எந்தவொரு வழிமுறையும் அரசாங்கத்திடம் இல்லை என்றே தோன்றுகின்றது. இதே வேளை, கடன்களை வாங்கி நாட்டை நிர்வகிப்பதென்பது ஒரு தற்காலிக ஏற்பாடாகவே இருக்கும். அது நிரந்தர தீர்வாக அமையாது.

அத்தியாவசிய உணவுப்பொருட்கள் மட்டுமன்றி எரிபொருள், எரிவாயு உட்பட அத்தியாவசியப் பொருட்களைப் பெற்றுக் கொள்வதில் மக்கள் தொடர்ந்தும் பாரிய பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றனர்.

இலங்கை துறைமுகத்தில் அனைத்து விதமான பொருட்களுடன் பல கப்பல்கள் நங்கூரமிப்பட்டுள்ள போதிலும், அவற்றை இறக்கப் போதிய டொலர் இல்லை. இந்நிலையில் இந்தியாவிடம் பெரும் உதவியை இலங்கை அரசு நாடியுள்ளது. மீண்டும் ஒரு பில்லியன் அமெரிக்க டொலகைளை கடனாகத் தருமாறு இலங்கை அரசாங்கம் இந்தியாவை கோரியுள்ளது. இலங்கைக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்வதற்காக இந்த நிதி உதவி கோரப்பட்டுள்ளது. இலங்கைக்கு கடன் வழங்கும் நாடுகள் நிபந்தனைகளின் அடிப்படையிலேயே அவற்றை வழங்குகின்றன.

இந்தியாவிடம் ஏற்கனவே பெருந்தொகையான கடன்களையும், உதவிகளையும் பெற்றுள்ள போதிலும், மீண்டும் ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்களை கடனாகத் தருமாறு இலங்கை அரசாங்கம் இந்தியாவை கோரியுள்ளது. கொழும்பில் நடைபெற்ற ஐந்தாவது பிம்ஸ்ரெக் சர்வதேச மாநாட்டில் பங்கேற்கும் நோக்கில் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் இலங்கை வந்திருந்தபோது, மேற்படி நிதியுதவி கோரப்பட்டுள்ளது.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் அரசியல் விவகாரங்களுக்கான உதவிச் செயலாளர் திருமதி விக்ரோரியா நூலண்ட் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டிருந்தபோது அவரிடம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஸ நேரடியாகவே உதவி கோரியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

புதுப்பிக்கத்தக்க வலுசக்தித் திட்டங்களுக்கு சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க முகவர் நிறுவனம் (USAID) மூலம் கடன் வசதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

அண்மைக் காலமாக இலங்கைப் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தமைக்கான காரணங்களை விளக்கிய ஜனாதிபதி, சர்வதேச நாணய நிதியத்தை அணுகும் விடயத்தில் அமெரிக்காவின் ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார். சர்வதேச நாணய நிதியத்திற்கு செல்வதற்கான அரசாங்கத்தின் தீர்மானத்தை பாராட்டிய திருமதி ஜூலி சங், இது நீண்டகால அடிப்படையில் இந்நாட்டுக்கு முக்கியமான தொன்றாகும் எனவும் சுட்டிக்காட்டினார்.

பங்களாதேஷிடமிருந்து இலங்கை மேலும் 250 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் உதவி கோரியுள்ளது. பங்களாதேஷின் வெளியுறவு அமைச்சர் அப்துல் மொமென் இதனை உறுதிப்படுத்தியுள்ளார்.

இவ்வாறு பல நாடுகளில் கடன்களைப் பெற்றுவரும் அரசாங்கம் இந்தக் கடன்களுக்காக நாட்டின் வளங்களைப் பறிகொடுக்கத் தயாராகியுள்ளதாக எதிர்கட்சிகள் குற்றம்சாட்டியுள்ளன.

இந்தியாவுடனான 1 பில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவி ஒப்பந்தம் பல கடுமையான நிபந்தனைகளின் கீழ் கையெழுத்திட்டப்பட்டதாக ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது. அந்த நிபந்தனையின் படியே நாட்டின் வான்வெளியை இந்தியா விரும்பியவாறு பயன்படுத்த அனுமதி வழங்கப்பட்டது என்றும் அக்கட்சி தெரிவிக்கின்றது. இலங்கையின் வான்பரப்பை தடையின்றி பயன்படுத்த இந்தியாவை அனுமதிக்கும் பிரேரணைக்கு கடந்த மார்ச் மாதம் 03ஆம் திகதி அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, அரச வளங்கள் அழிக்கப்படுவதாகத் தெரிவித்துள்ள தேசிய மக்கள் சக்தியின் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க, துறைமுகங்கள், அனல் மின் நிலையங்கள், எண்ணெய்த் தாங்கிகள், கரையோரங்கள், தோட்டங்கள் உள்ளிட்ட அரச வளங்கள் வெளிநாடுகளுக்குச் சொந்தமாக்கப்பட்டால் நாடு என்று ஒன்று இருக்குமா? எனவும் கேள்வி எழுப்பியுள்ளார்.



பருப்பு, எண்ணெய் மற்றும் பிற அத்தியாவசியப் பொருட்களைப் பெற இந்தியா மற்றும் சீனாவிடம் இருந்து தலா 1 பில்லியன் அமெரிக்க டொலர் கோரப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார். பாகிஸ்தானிடம் இருந்து 200 மில்லியன் அமெரிக்க டொலர் கடனாப்பெற்றுள்ளதாகவும் தெரிவித்தார்.

பால்மா மற்றும் கோதுமை மா இறக்குமதிக்காக அவுஸ்திரேலியாவிடம் இருந்து 300 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் கோரியுள்ள அரசாங்கம், உக்ரைன் மீது ரஷ்யா போரை நடத்திவரும் நிலையில், எரிபொருள் மற்றும் எரிவாயுவைப் பெறுவதற்கு ரஷ்யாவிடமிருந்தும் 300 மில்லியன் அமெரிக்க டொலரைக் கடனாகப் பெற்றதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். இக்கடன்களைத் திருப்பிச் செலுத்துவதிலும் எதிர்காலத்தில் அரசாங்கம் பெரும் சிக்கல்களையே எதிர்கொள்ளும். ஓர் ஆட்சிமாற்றம் ஏற்பட்டாலும் கூட நாட்டைப் பொறுப்பேற்கும் புதிய அரசாங்கம் இந்தக் கடன்களை மீளச் செலுத்துவதிலேயே அதன் காலத்தை செலவழிக்க நேரும். இன்றுள்ள நிலைமையை கருத்தில் கொண்டு, இலங்கை மக்களுக்காக நிவாரணங்களை, மானியங்களை சர்வதேச நாடுகள் வழங்க முன்வந்தால் மட்டுமே மக்களின் நாளாந்தப் பிரச்சினைகளுக்கு ஓரளவிற்குத் தீர்வு கிடைக்கும்.





CEDARGREEN COIN LAUNDRY & DRY CLEAN DEPOT

" VERY CLEAN LAUNDRY" Avoid The Rush ..... Come during weekdays!



• Large laundry Folding Tables, Lots of Space • We offer wash, Dry & fold at .99Cents /lb

Commercial

. We Clean Commercial Linens, Aprons, & Towels • We Clean Uniforms Dry Clean or Wash & Dry

. We Clean Towels/Sheets from Daycare, Clinics, Hair Saloon, Nail Spa, Restaurants etc

STORE Tel: 416-289-7514

OPEN DAILY 8 am – 11 pm

Sat. & Sun 7 Am – 11 pm

(Near Bellamy & Lawrence – find us in GOOGLE !!) 3340 Lawrence Ave. East, Unit 5, Scarborough, ON M1H 1A7

# இன்னல் நீக்கும் இயற்கை - 86



- அகணி -
authorakani@gmail.com

பண்டிட் லக்சுமிதாஸ் எழுதிய தியானமும் மன அமைதியும் என்ற நூலினை வாசிக்கும் வாய்ப்புக் கிட்டியது. "தியானம் பழகும்போது நிதானம் தேவை, மனதை அடக்குவதில் முரட்டுத்தனம் கூடாது, தியான காலத்தை கொஞ்சம் கொஞ்சமாக நீட்டித்துக் கொண்டு போக வேண்டும்" போன்ற நூலாசிரியரின் முன்னுரையில் காணப்பட்ட வாக்கியங்கள் என் கவனத்தை ஈர்த்தன. நூலாசிரியரின் இந்தக் கருத்துடன் நான் மிகவும் உடன்படுகின்றேன். கவனமற்ற தீவிரமான தியானப் பழக்கத்தால் மனநிலை பாதிக்கப்படும் ஆபத்துக்கள் பற்றி சில உண்மைச் சம்பவங்கள் மூலம் நானும் உணர்ந்து கொண்டுள்ளேன். இந்தக் கட்டுரை எழுதிக் கொண்டிருந்த பொழுது நான் அறிந்த துயரச் செய்தியைப் பதிவிட விரும்புகிறேன். தீவிரமாகத் தியானம் செய்யும் பழக்கம் கொண்ட இளையவர் ஒருவர் மூளை பாதிப்பினால் உயிர் இழந்துள்ளார். தியானத்தை மிகவும் கவனமாகச் செய்ய வேண்டியதின் அவசியத்தை இச்செய்தி வலியுறுத்துகின்றது. ஆனால் நாளாந்தம் சிறிது நேரம் தியானம் செய்து வந்தால் மனம் அமைதி பெறுவதோடு நோய்களின் பாதிப்பையும் தவிர்த்துக் கொள்ளலாம் என்பது பொதுவான கருத்து.

தியானம் என்பது யாவர்க்கும் பொருந்தும் விடயம். எப்பொழுதும் இயங்கிக் கொண்டிருக்கும் மனதை சிறு மணித் துளிகளுக்கு அடக்கிக் கொள்வதாலும் மனிதனுக்குச் சக்தி கிடைக்கிறது. "தியானம் என்பது மனதை ஒரு நிலைப்படுத்தி அடைந்த நிலை" என்கின்றார் நூலாசிரியர் பண்டிட் லக்சுமிதாஸ். தியானம் என்பது சில நன்மைகளை உணர அல்லது மனதின் உள்ளடக்கத்தை அறியாமல் அதனை ஒப்புக்கொள்ள அல்லது தியானத்தையே ஒரு முடிவாக நினைத்து ஒரு நபர் மனதை இயக்குதல் அல்லது பயிற்றுவித்தல் அல்லது உணர்வு நிலையைத் தூண்டுதல் மூலம் செய்யப்படும் நடைமுறையாகும். முள்ளை முள்ளால் எடுப்பதுபோல, மனதை மனத்தினால்தான் அடக்கமுடியும். இதற்கு நம் கையில் இருக்கும் ஒரே கருவி தியானம். தியானம் நாளாந்தம் செய்து வருவோர் நல்ல குணத்துடனும், நலத்துடனும் வாழ்ந்து வருகின்றனர் என்பதைப் பல்வேறு ஆய்வுகளும் தெரிவிக்கின்றன. தியானம் செய்வதற்கு உகந்த ஆசனம் பத்மாசனம் என்று கூறப்படுகிறது. நல்லெண்ணையில் எரியும் விளக்கு, வாசனைமிக்க ஊதுபத்தி புகையும் நல்ல சூழலை உருவாக்கும்.

தியானத்திற்கான உகந்த காலம் காலை 5:30 மணி அல்லது 6:00 மணி ஆகும். பத்மாசனமாகவிருந்து தியானம் செய்தால் முதுகை நிமிர்த்தியவாறு வைத்திருக்க உதவும். வலது காலை இடது தொடை மேல் வைத்து வயிற்றுப் பகுதியை ஒட்டியவாறு கால்களை வைத்துக் கொள்ள வேண்டும். இடது காலை வலது தொடை மேல் வைத்துக்கொள்ள வேண்டும். தலை, கழுத்து, முதுகு ஆகிய பகுதிகள் நேராக இருக்க வேண்டும். தியான சமயத்தில்



மூச்சைச் சீராக வைத்திருக்க வேண்டும். எல்லா உயிரினங்களும் சுவாசிக்கின்றன. மூச்சு இன்றி உயிர்வாழ முடியாது. நாங்கள் தூங்கும் பொழுதும் விழித்திருக்கும் பொழுதும் உற்ற நண்பனாக இருப்பது மூச்சு ஆகும். மூச்சுப் பயிற்சி எனப்படும் பிராணாயாமத்தால் நாடிகள் சுத்தமாகின்றன. நமது உடலில் 72,000 நாடிகள் உள்ளதாகக் கூறப்படுகின்றது. பிராணாயாமத்தில் நாசித்துவாரம், வாய் இவற்றை வைத்து பிராணாயாமம் செய்யப்படுகிறது. ஒரு நாசித்துவாரம் வழியாக மூச்சை மெதுவாக இழுத்து அதே துவாரம் வழியாக மெதுவாக மூச்சை விடவும். மோதிரவிரல், கட்டை விரல் ஆக இரண்டையும் இரண்டு நாசித்துவாரம் மேல் வைத்து மற்ற விரல்களை நீக்கி விடவும். இவ்வாறாக மூச்சு இழுப்பது, விடுவது போன்ற செயற்பாடுகளைச் செய்யலாம். இவ்வாறு ஐந்து தடவை செய்ய வேண்டும். பின்பு அடுத்த துவாரம் வழியாக இழுத்து அதே துவாரம் வழியாக ஐந்து தரம் செய்ய வேண்டும். வலது நாசி வழியாக மூச்சை மெதுவாக இழுத்து, உள்ளே நிறுத்தி, பின்பு இடது நாசி வழியாக விடவும். பின்பு இடது நாசி வழியாக உள்ளே இழுத்து, நிறுத்தி, வலது நாசி வழியாக விடவேண்டும். இவ்வாறாக ஐந்து தடவையாவது செய்ய வேண்டும். இருதய நோய், நீரிழிவு நோய் உள்ளவர்கள், மனதில் நிறைந்தளவு கவலைகள் உள்ளவர்கள் பிராணாயாம பயிற்சி செய்யக்கூடாது என்றும் சொல்லப்படுகிறது. மருத்துவ ஆலோசனையுடன் செய்வது நல்லது.


"மனம் என்பது உணர்ச்சிகளுக்கும், எண்ணங்களுக்கும் உண்டான அமைப்பு" என்கின்றார் பண்டிட் லக்சுமிதாஸ். மனதில் நல்ல எண்ணங்கள் இருக்குமானால் செயல்களும் நன்றாகவிருக்கும் என்பது நாமெல்லாம் அறிந்த பொதுவான விடயம். வேகமான அலைகளில் அகப்பட்ட படகு போல மனமானது விருப்பு வெறுப்புகளில் சுழலுகிறது. உடலில் உள்ள தீய எண்ணங்களை நீக்கினால் நலத்துடன் வாழலாம் என்பதும் பொதுவான கருத்து. மனதினை பாதரசத்திற்கு ஒப்பிடுவர். பாதரசம் கீழே விழுந்ததும் ஓடும் என்பதால் இவ்வாறு ஒப்பீடு செய்யப்படுகிறது. கிளைகளுக்குத் தாவும் குரங்குடன் ஒப்பீடு செய்யப்பட்டு மனம் ஒரு குரங்கு என்று சொல்லப்படுகிறது.

தியானம் மூலமே மன அமைதி ஏற்படும். தியானம் செய்யும்பொழுது தூக்கம் வரலாம். தியானம் செய்யும்பொழுது மனத்தில் கற்பனைகள் தோன்றிக் குழப்பும். தியானம் செய்யும்பொழுது வயிறு வெறுமையாக இருக்க வேண்டும். தியானம் செய்யும் பொழுது பத்மாசனம் உகந்த இருக்கை முறை. அது முடியாத பொழுது பொருத்தமான வேறு இருக்கை முறையைக் கடைப்பிடிக்கலாம். தியான அநுபவங்களை மற்றவர்களிடம் பகிரக் கூடாது என்கின்றனர். தியானத்திற்கு அடிப்படையாக நிறைந்தளவு பொறுமை அவசியம். ஆரம்பகாலத்தில் தியானம் செய்தபோது இருந்த ஆர்வம் காலம் செல்லச் செல்லக் குறைந்துவிடும். இதற்குக் காரணம் தியானத்தில் உடனடி பலன்களைக் காணமுடியாது. தியானம் செய்யும் பொழுது ஒரே இடத்தில் ஒரே நேரத்தில் தியானம் செய்வதைப் பழக்கமாக்கிக் கொள்வது நல்லது. நினைவாற்றல் பிரச்சினைகள், சோம்பல், தூக்கம் ஆகிய மூன்று விடயங்களும் தியானத்தின் முக்கிய தடைகளாக உள்ளன. நம் அன்றாட வாழ்வில் நமக்கு ஏற்படும் பிரச்சனைகளினாலும், அவசர வேலைகளினாலும் மன அழுத்தம் ஏற்படுகின்றது. நம் உடல் ஓரிடத்தில் இருந்தாலும், நம் மனது எத்தனையோ சிந்தனையில் அலைபாய்ந்து கொண்டு தான் இருக்கின்றது. அந்த மனதை ஒருநிலைப்படுத்தி மன அழுத்தத்தைக் குறைப்பதற்கான ஒரே வழி தியானம் தான். கண்களை மூடி நாங்கள் தியானம் செய்வதின் மூலம் ஏற்படும் நன்மைகளைப் பற்றிக் கவனிக்கலாம். எங்கள் மனதில் அமைதி ஏற்படும். எங்கள் உடலிற்கு ஆரோக்கியத்தைத் தரும். நாங்கள் வாழும் ஆன்மீக வாழ்விற்கும் இந்த தியானம் மிகவும் உதவியாக இருக்கும். மொத்தத்தில் எங்கள் வாழ்க்கையின் வெற்றிக்கு உதவும் ஒரு விடயமாகவும், இன்னல்களைத் தீர்க்கும் இயற்கை வழிமுறையாகவும் தியானம் உள்ளது.

**அன்பான விளம்பரம் வாசகர்களே!**

**இயற்கை வளங்களால் எவ்வாறு இன்னல் நீங்கி வாழலாம் என்று அறியும் பொருட்டு எழுந்த தேடலால் கிடைத்த தகவல் பதிவாக அசைந்து கொண்டிருக்கும் இந்தத் தொடர்கட்டுரை எமது பொது அறிவை விருத்தி செய்யும் நோக்குடன் எழுதப்படுகின்றது. இக்கட்டுரையில் கூறப்படும் கருத்துக்கள் இயற்கை சார்ந்து இருந்தாலும் உங்கள் உடல்நிலைக் கேற்ப பொருத்தமான மருத்துவக் கருத்துக்களாக அமைந்து விடாது என்பதைக் கவனத்தில் எடுத்துக் கொள்ளுங்கள். எப்பொழுதும் பொருத்தமான வைத்திய ஆலோசனையை மேற்கொள்ளுங்கள் என்று வலியுறுத்திக் கூறிக்கொள்கின்றேன். ஆனாலும் நாம் இயற்கையோடு இணைந்து வாழ்வதற்கான தகவலையும், விழிப்புணர்வையும், ஆரோக்கியமாக வாழ்வதற்கு வேண்டிய பொதுவறிவையும் இந்தக் கட்டுரை வழங்கும் என்று நம்புகின்றேன்.**

நாமும் நன்றாக வாழ்வோம். நம்மைச் சூழவுள்ளவர்களும் நன்றாகவே வாழட்டும்.



# காப்புறுதியின் அவசியம்




தமிழ் இளைஞர் சுமார் மூன்று தசாப் தங்களுக்கு முன்பு தொடங்கி படிப்படி யாகக் கனடாவில் குடியேறத் தொடங்கிய நினைவுகளை சற்று நேரம் மனதில் மீட்டெடுத்துப் பார்க்கின்றேன். ஏனெனில் அன்றைய காலம் குடியேறிய அவர்களில் நானும் ஒருவன்.

புதியதோர் உலகில் கால் பதித்த உணர்வே அந்நேரம் என் மனதில் தென்பட்டது. புதியதோர் நாட்டுக்குப் பழக்கப்படவே சில வருடங்கள் எடுத்தன. ஆனால் இன்றைய கனடியத் தமிழரின் நிலையினைப் பார்க்கின்றேன். கனடியர் களுக்குக் கனடாவில் தமிழர் வழிகாட்டும் நிலைமைக்கு உயர்ந்துள்ளனர்.

* தனி நபர் நிதியியல், பொருளாதார வளர்ச்சி, பல்வேறு வகையான முதலீட்டுத் திட்டங்கள்
* சகல வர்த்தகத் துறைகளிலும் கால் பதித்துக் கொடிகட்டிப் பறக்கும் சாதனைகள்
* கனடிய அரசியல் மற்றும் உயர் நிர்வாகத் துறைகளில் தமிழரின் பிரவேசம் என இப்படியே பலவற்றை சொல்லிக் கொண்டு போகலாம்.

இவற்றினைவிட இன்னோர் மிக முக்கியமான, பெருமை தரும் விடயம்: கனடியத் தமிழ் சமூகத்தில் புதிய தலை முறையினரின் கல்வித்துறை வளர்ச்சி, சாதனைகள். புள்ளிவிபரப்படி சாதனைகள் செய்யும் பெண் பிள்ளைகளின் தொகை ஆண்களைவிட மிக அதிகமாக முன்னேற்றமடைந்து செல்கின்றது.

அனேகமாக, கனடாவில் உள்ள பல் கலைக்கழகங்கள், கல்லூரிகள் ஒவ்வொன்றிலும் பல்வேறுபட்ட துறைகளில் சாதனைகள் பல படைக்கும் தமிழ் மாணவர்கள் இல்லாமல் இருக்காது. இவை ஒவ்வொரு வருடமும் தொடர்ந்த வண்ணமேயுள்ளது. பல்கலைக்கழகப் பட்டப் படிப்புகளை முடித்த கனடாத் தமிழ் சமூகத்தின் புதிய தலைமுறையினர் தொடர்ந்து அதிக வருமானம் தரும் தொழில் துறைகளில் பரவலாகப் பணி புரிகின்றனர்.

ஒவ்வொரு தனிமனிதனின் வாழ்விலும் பிரச்சினைகள், ஆபத்துகள் என ஏற்பட்டு, தொடர்ந்து பல்வேறு வகையான இழப்புகள், சிக்கல்கள் வராது என என்றுமே எவராலும் ஆரூடம் சொல்ல முடியாது.

குறிப்பாக நோய்கள், விபத்துகளின் பாதிப்புகள் காரணமாக உடல் இயங்க முடியாத நிலை ஏற்பட்டால் செய்யும் தொழிலைத் தொடர முடியாத நிலைமை ஏற்படலாம். பலருக்கு ஏற்பட்டும் இருக்கின்றது. மாதா மாதம் தொழில் செய்து, பெற்று வந்த வருமானத்தினை இழக்கவேண்டி வரலாம்.

இப்படிப்பட்ட ஆபத்துகளை எதிர்கொள்ள வேண்டி வந்தால் தீர்வு என்ன?

உதாரணத்திற்கு ஒருவரின் கதையினை இங்கு குறிப்பிடவேண்டும் போல் உள்ளது. ரொறொன்ரோ வைத்தியசாலை ஒன்றில் பிரபல்யமான விசேட பல் சத்திரசிகிச்சை நிபுணர் (Dental Surgeon) அவரது ஆற்றல், திறமைகளுக்கு ஏற்ற மாதிரி அதி கூடிய சம்பளம் பெற்றுவந்தார்.

ஒரு நாள் வைத்தியசாலையினுள் நடந்து போகும்போது எதிர்பாராதவிதமாகக் கால் இடறுபட்டு தடுக்கி வீழ்ந்தபோது பாது காப்பிற்காக வலது கையினை நிலத்தில் ஊன்றியபோது கை மணிக்கட்டு (Wrist) உடைந்து விட்டது. கைகளை உப



யோகித்து செய்யும் பல் சத்திரசிகிச்சை களும் தொடர்ந்து செய்யமுடியாத நிலைமை ஏற்பட்டு வருமானமும் நின்று விட்டது. ஆனால் அங்கு அவர் ஏற்கனவே உடன்படிக்கை செய்து வைத்திருந்த 'உடல் இயலாமைக்குரிய காப்புறுதித் திட்டம்' நிவாரணம் வழங்கி கைகொடுத்தது.

இன்னொரு சம்பவமும் என் நினைவில் வருகின்றது. சுமார் 25 வருடங்களுக்கு முன்பு நான் காப்புறுதி முகவர் தொழிலை "கனடா லைப் இன்சூரன்ஸ் கம்பனி" (CANADA LIFE INSURANCE COMPANY) என்னும் பிரபல்யமான கம்பனியில் ஆரம்பித்த காலம்.

கம்பனி தலைமையக அவை கூடத்தில் (Auditorium Hall) பல நூற்றுக்கணக்கான முகவர்களை ஒன்றிணைத்து காப்புறுதித் தொழில் தொடர்பான கருத்தரங்கு ஒன்று நடந்தபோது முகவர் என்ற ரீதியில் எனக்கும் பங்கு பற்றும் சந்தர்ப்பம் கிடைத்தது.

இக்கம்பனியின் உடல் இயலாமைக்கான காப்புறுதித் திட்டத்திலிருந்து (Disability Insurance Coverage) நிவாரணம் பெற்று வரும் கனடாவின் மில்லியன் டொலர் சம்பளம் பெற்றுவந்த ஒரு தலைசிறந்த விளையாட்டு வீரன் அங்கு மேடையில் அறிமுகப்படுத்தப்பட்டு அவரும் தனது வாழ்வின் அதிர்ஷ்ட நிலை, தொடர்ந்து குறுக்கிட்ட துர்அதிர்ஷ்ட நிலை, அதிலிருந்து மீளக் கைகொடுத்த காப்புறுதித் திட்டங்கள் எப்படியிருந்தன எனத் தனது அனுபவங்களைக் கூறினார்.

ஒரு விபத்தின் காரணமாக அவரினால் தொடர்ந்து விளையாட்டில் ஈடுபட முடியாமல், ஏற்கனவே பெற்றுவந்த கூடிய வருமானத்தை இழந்தபோது காப்புறுதித் திட்டம் தொடர்ந்து வருமானத்தினை வழங்கி அவரை வாழ வைத்தது.

பின்வரும் தரவுகளின் அடிப்படையில் ஒவ்வொருவரின் வருமானங்களுக்கு ஏற்ற மாதிரி "உடல் இயங்க முடியாத காப்புறுதித் திட்டம்" (Disability Isurance Coverage) ஒன்றிலிருந்து மாதா மாதம் ஒரு நிவாரணத்தினை நோயின் தாக்கத்திலிருந்து மீளும்வரை தொடர்ந்து பெற்றுக் கொண்டிருக்கலாம்.

| வருட வருமானம் (Annual Income) | அதிகூடிய மாத நிவாரணம் (Maximum monthly Disability Benefit) |
|---|---|
| $35,000 | $2,200/month |
| $50,000 | $3,000/month |
| $100,000 | $5,200/month |
| $120,000 | $5,925/month |
| $140,000 | $6,625/month |
| $200,000 | $8,550/month |
| $300,000 | $11,350/month |
| $500,000 | $16,050/month |
| $1,000,000 | $25,000/month |

இக்காப்புறுதித் திட்டத்திற்குச் செலுத்தும் கட்டணத்தினை நிர்ணயிப்பதில் பின்வரும் விடயங்கள் முக்கியமான காரணிகள் ஆகும்.

- வயது (Age)
- காப்புறுதியில் சேரும்போது உடல் நிலைமை (Health)
- செய்யும் தொழில் (Occupation)
- உடல் இயங்க முடியாமைக்கான வரைவிலக்கணம் (Definition of Disability)
- நிவாரணத்தினை ஆரம்பிக்கும் கால தாமதம் (Waiting period)
- நிவாரண காலம் (Benefit period)
- பெற விரும்பும் மாத நிவாரணத் தொகை (Coverage amount)

இறுதியாக, மன நிறைவான வேதனத் தினைப் பெற்றுவரும் புதிய தலைமுறை யினருக்கு சமூக உணர்வோடு சேர்ந்த ஓர் அறிவுரை!

"எந்த மன நிறைவும் நிரந்தரமல்ல. காப்புறுதியின் பாதுகாப்புகளைப் புரிந்து கொள்ளுங்கள்."

## நேட்டோ...

02ஆம் பக்கத்தொடர்ச்சி

உயிரியல் ஆயுதங்களைப் பயன்படுத்தத் தயாராகி விட்டதாக ரஷ்யா குற்றம் சாட்டுகிறது. இவ்வாறு ஒரு பொய்க் குற்றத்தை மற்றவர்கள் மீது பழி சுமத்துவது, அவ்வாறான ஆயுதங் களைத் தான் பாவிக்கத் தயராகுவதற் காக என்றே நாங்கள் கவலைப்படுகி றோம். நிச்சயமாக ரஷ்யா எங்கள் மீது கூறும் குற்றச்சாட்டுகள் தவறானவை. மற்றவர்களைக் குற்றம் சாட்டுவது உண்மையில் தாங்கள் அதைச்செய்வ தற்குத் தயாராகுவதற்காகும். ரஷ்யா தனது சொந்த நாட்டில் தம்மை எதிர்த்தவர்களுக்கு இரசாயனப் பொருட் களைப் பாவித்ததை நாம் எல்லோரும் அறிவோம். சிரியாவில் Assad அரசு தனது சொந்த மக்களுக்கு எதிராக இரசாயன ஆயுதங்கள் பாவித்தபோது அவர்களுக்கு ரஷ்யா உதவியிருந்தது என்பதும் எங்களுக்குத் தெரியும்.




இரசாயன ஆயுதங்களின் எவ்விதமான பயன்பாடும் இப்போரின் நிலையை முற்றிலும் திசை திருப்பிவிடும். இது சர்வ தேச சட்டத்தின் அப்பட்டமான மீறலாக இருக்கும். இது உக்ரைனில் உள்ள மக்களைப் பாதிக்கும். அத்துடன் இது அருகில் இருக்கும் நேட்டோ நாடுகளில் வாழும் மக்கள் மீது நேரடியான தாக்கத்தை ஏற்படுத்தும் அபாயமும் உள்ளது. இவ் இரசாயன ஆயுதங்களின் மாசுக்கள் அயல் நாடுகளுக்குப் பரவுவது தவிர்க்க முடியாதது.



இரசாயன, உயிரியல், கதிரியக்க மற்றும் அணுசக்தி அச்சுறுத்தலுக்கு எதிராக உக்ரைன் மக்களைப் பாது காக்க உதவும் உபகரணங்களை உக்ரைனுக்கு வழங்க நேட்டோ நாடுகள் ஒப்புக் கொண்டுள்ளன. நேட்டோ நாடுகளின் இராணுவ அதிகாரி நேட்டோவின் இரசாயன, உயிரியல், கதிரியக்க மற்றும் அணு சக்திப் பாதுகாப்பு அணிப்பிரிவை தயார் நிலையில் வைத்துள்ளார்" என்றார்.

பின்னர் ஊடகவியலாளர் மாநாட்டில் அமெரிக்க அதிபர் ஜோ பைடன் உரையாற்றும்போது உக்ரைனில் ரஷ்யா இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தக் கூடாது என எச்சரிக்கை விடுத்ததுடன் ரஷ்யா இரசாயனத் தாக்குதலை நடத்தும் என்பது ஓர் உண்மையான அச்சுறுத்தல் எனவும், அவ்வாறு ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் இரசாயன ஆயுதம் இப்போரில் பயன்படுத்தினால் நேட்டோ தகுந்த பதிலளிக்கும் எனவும் தெரிவித்தார்.

Brusselsஇல் நடைபெற்ற நேட்டோ தலைவர்களின் விசேட உச்சிமாநாடு நிறைவடைந்ததைத் தொடர்ந்து அங்கு G7 நாடுகளின் தலைவர்களின் மாநாடு தொடர்ந்தது.

# தமிழின் நுட்பங்கள் பற்றி அறியாமலே அதை உபயோகிக்கிறோம்!

- நேர்காணல்: எழுத்தாளர் இந்திரா பார்த்தசாரதி - நேர்கண்டவர்: கண்ணன்

இந்திய ஒன்றிய அரசின் இலக்கிய அமைப்பான சாகித்ய அகாதெமி சமீபத்தில், தமிழ் எழுத்தாளர் இந்திரா பார்த்தசாரதிக்கு 'ஃபெலோஷிப்' அளித்து கௌரவித்துள்ளது. சென்னையில் மார்ச் 29ஆம் நடைபெற்ற விழாவில் இந்த விருது இந்திரா பார்த்தசாரதிக்கு வழங்கப் பட்டது. இந்திய அரசு எழுத்தாளர்களுக்கு அளிக்கும் உச்சபட்ச கௌரவங்களில் ஒன்று இது. ஆர்.கே. நாராயண், குஷ்வந்த் சிங், தகழி சிவசங்கரன் பிள்ளை, சிவராம் காரந்த், எம்.டி. வாசுதேவன் நாயர், அம்ருதா ப்ரீதம் போன்ற ஆகச் சிறந்த எழுத்தாளர்களுக்கே இக்கௌரவம் இதுவரை அளிக்கப்பட்டுள்ளது. கடந்த 54 ஆண்டுகளில் தமிழில் இந்த கௌரவம் பெற்றவர்கள் நான்கு பேர்தான். ராஜாஜி (1969), தெ.போ. மீனாட்சி சுந்தரம் (1975), கே.ஆர். சீனிவாச ஐயங்கார் (1985), ஜெயகாந்தன் (1996). இப்போது 25 ஆண்டுகளுக்குப் பிறகு இ.பா. இந்த கௌரவம் பெற்றுள்ளார்.

இனி சென்ற இதழில் வெளியான இந்திரா பார்த்தசாரதி பேட்டியின் தொடர்ச்சி;

விளம்பரம்: அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் நகுலன் உங்களுக்கு அரை நண்பராக இருந்தவர் என்று சொன்னீர் கள். உங்களுடன் அவர் போராட்டங் களில் எல்லாம் கலந்துகொண்டாரா?

இந்திரா பார்த்தசாரதி: அப்போது நகுலனுடைய பெயர் டி.கே. துரைசாமி தான். ஒருமுறை ஒரு போராட்டத்தை ஒட்டி 15 நாள் நான் பல்கலைக்கழகத்தில் இருந்த நீக்கப்பட்டிருந்தேன். பல்கலைக் கழகத்தில் மாணவர்களுக்கு அடிப்படை வசதியில்லாமல் இருந்தது. பெண்கள் விடுதியை சுற்றி ஒரு பெரிய மதில் சுவரை கட்டியபோது, எங்கள் மேல் நம்பிக்கை இல்லையா என்று மாணவர்கள் கொதித்து விட்டனர். உடனே அடிப்படை வசதி இல்லாத பிரச்சினை மேலெழுந்து, போராட்டம் நடந்தது. அப்போது துரைசாமி (நகுலன்) என்னிடம் சொன்னான்: "உனக்கு எதற்கு இந்த மாதிரி வேலைகள் எல்லாம், நம்மைப் படிப்பதற்குத் தானே அனுப்பினார்கள்?"

அவன் அப்போது யாருடனும் பேச மாட்டான். மொத்த பல்கலைக்கழகத்தி லேயே அவனுக்கு மூன்று அல்லது நான்கு நண்பர்கள்தான் இருப்பார்கள். மற்றவர்களிடம் இருந்து ஒதுங்கியே இருப்பான். நிறைய படிப்பான். தான் உண்டு, தன் புத்தகங்கள் உண்டு, நூலகம் உண்டு என்றிருப்பான்.

அவன்தான் நகுலன் என்பது எனக்குப் பின்னால்தான் தெரியும். அவருக்கும் நான் எழுதுவேன் என்று தெரியாது. 'கணையாழி' சிறுகதைப் போட்டிக்கு அவர் 'நகுலன்' என்ற பெயரில் கதையை அனுப்பியிருந்தார். நான் தான் கதையைத் தேர்வு செய்தேன். அப்புறம் விலாசத்தைப் பார்த்தபோது டி.கே. துரைசாமி என்றிருந் தது. உடனே அவரை தொடர்புகொண்டேன்.

விளம்பரம்: சிதம்பரத்திலிருந்தபோது அங்கிருந்த க.நா.சு. புத்தகக் கடைக்கு போவீர்களா?

இந்திரா பார்த்தசாரதி: க.நா.சு. புத்தகக் கடை பல்கலைக்கழகத்திற்கு மிகவும் அருகிலேயே இருந்தது. அங்கே போவோம் நிறைய பேர் வருவார்கள். யாராவது வந்து புத்தகம் கேட்டால், "அந்த புத்தகம் உனக்கு புரியாதுப்பா, சொன்னால் கேள்" என்று விடுவார். க.நா.சு. புத்தகத்தைப் பார்க்கவே விடமாட்டார். வியாபாரத்திற்கே எதிரான ஒருவர் அவர்! மௌனி அங்கே சிலநேரம் வருவார். அப்போது அண்ணா மலையில் என்னுடன் படித்த துரைசாமி (நகுலன்) இவர்கள் எல்லோரையும் அடிக்கடி போய் பார்ப்பான். நான் எப்போதாவது போவேன்.

விளம்பரம்: போலந்தில் வார்சா பல்கலைக் கழகத்தில் வேலை பார்த்த அனுபவம் பற்றி சொல்லுங்கள்?

இந்திரா பார்த்தசாரதி: முதலில் போலந்துக்கு நான் சென்றதே ஒரு விபத்தாகத்தான் நடந்தது. இங்கிருந்து வார்சா பல்கலைக்கழகத்திற்கு ஒரு பேராசிரியரை அனுப்ப முடிவு செய்த போது, அந்த நபரைத் தேர்வு செய்யும் குழுவில் நான் இருந்தேன். ஒருவரைத் தேர்வு செய்துவிட்டோம். ஆனால், அவர் ஏதோ காரணத்தில் வார்சாவுக்குப் போக வில்லை. அப்புறம் ஒரு வருடம் சென்ற பின் போலந்துக்கான இந்தியத் தூதராக இருந்த சிவராம கிருஷ்ணனை டில்லியில் சந்தித்தபோது அந்த ஆள் வந்து சேரவில்லை என்று சொன்னார். "நீங்கள் வருகிறீர்களா" என்று என்னைக் கேட்டார். அவருக்கு இலக்கியத்தில் ஈடுபாடு இருந்தது. எனவே, நான் வரவேண்டும் என்று விரும்பினார். நான் புறப்பட்டேன்.

நான் போய்சேர்ந்த நேரம் மிக வித்தியாசமான சூழ்நிலை அங்கு இருந்தது. நாடு முழுவதும் போராட்டத் திலிருந்தது. அப்போது அங்குள்ள போராட்டமுறைக்கும் நமது ஊர் போராட்டமுறைக்கும் வித்தியாசம் உண்டு. அங்கு மாணவர்கள் பல்கலைக்கழகத்தை ஆக்கிரமித்துக் கொண்டனர். தொழிலாளர் கள் தொழிற்சாலையை ஆக்கிரமித்துக் கொண்டனர். ஆனால், ஒரு வேலையும் செய்ய மாட்டார்கள். எந்த பொருளுக்கும் ஒரு சேதமும் வராமல்வேறு பார்த்துக் கொள்வர்.



பல்கலைக்கழகத்துக்குப் போன முதல் நாள் என்னிடம் சொன்னார்கள், "உங்களுக்குக் கொஞ்ச நாட்களுக்கு வேலையிருக்காது. ஏனென்றால், இங்கே போராட்டம் நடந்து கொண்டிருக்கிறது" என்று. நான் சொன்னேன், "எனக்கு மிகவும் சந்தோஷம். இப்போதுதான் எனக்கு வீட்டில் இருப்பது மாதிரி இருக்கிறது" என்று. ஏனென்றால், டில்லிக்கு வேலைக்கு போனபோதும் இப்படித்தான் அங்கு போராட்டம் நடந்து கொண்டிருந்தது.

வேலையில்லை என்பதால் என்ன செய்வது என்று கேட்க அம்பாசிடர் சிவ ராமகிருஷ்ணனை தொடர்புகொண்டேன். அவர் வீட்டில் தொலைப்பேசி ஒலிப்பதற்கு முன்னால் அந்த லைனில் போலீஸ்காரர் கள் வந்தார்கள். ஒருவர் சொன்னார்: "தொந்தரவுக்கு மன்னிக்கவும். பேசும் போது ஜாக்கிரதையாகப் பேசுங்கள். உங்கள் தொலைப்பேசி ஒட்டுக் கேட்கப் படுகிறது. எனவே, அரசுக்கு விரோதமாக நீங்கள் பேசினால் எங்களுக்கு உங்களைக் கைது செய்ய வேண்டிவரும். அதற்காக நாங்கள் வருந்துகிறோம். அந்த சங்கடத்தை நீங்கள் எங்களுக்குத் தரமாட்டீர்கள் என்று நம்புகிறோம்."

மிகவும் மரியாதைக்குரிய ராணுவ ஆட்சியாக இருக்கிறதே என்று எனக்கு ஆச்சரியம். இதுதான் கம்யூனிஸ்ட் காவல் துறைக்கும் மற்ற காவல்துறைக்கும் உள்ள வித்தியாசம்.

போலந்தில் அங்குள்ள மாணவர்களுக்குத் தமிழை கற்றுக் கொடுத்தது, வித்தியாச மான அனுபவமாக இருந்தது. தமிழ் நம் தாய்மொழி என்பதால் அதிலுள்ள நுட்ப மான பல விஷயங்களைப் பற்றி அறியா மலேயே அதனை நாம் உபயோகித்துக் கொண்டு வருகிறோம். அவர்களுக்கு கற்றுக்கொடுத்தபோது அவர்கள் எழுப்பிய சந்தேகங்கள் வழிதான் எனக்கு இது தெரிய வந்தது. அதனால், தமிழை இன்னும் அதிகமாகக் கற்றுக்கொள்ள முடிந்தது. போலந்தில் எனக்கு ஏற்பட்ட அனுபவங்களை அடிப்படையாக வைத்துத் தான், 'இயேசுவின் தோழர்கள்' நாவலை எழுதினேன்.

விளம்பரம்: டில்லியில் நீண்ட நாள் நீங்கள் வாழ்ந்துள்ளீர்கள். நீங்கள் அங்கு இருந்த காலகட்டத்தில்தான் தி. ஜானகிராமன், ஆதவன், சுஜாதா, அம்பை, வாசந்தி, கஸ்தூரிரங்கன் உட்படப் பலர் அங்கிருந்த னர். அந்த இலக்கிய சூழல் உங்களுக்கு மனநிறைவு தந்ததா?

இந்திரா பார்த்தசாரதி: உண்மைதான், நான் டில்லியிலிருந்தபோது மூன்று தலை முறை எழுத்தாளர்கள் அங்கே இருந்தனர். ஒரு வளமான இலக்கிய சூழ்நிலை அப்போது டில்லியிலிருந்தது. எல்லோரும் அடிக்கடி சந்தித்தோம். கஸ்லூரிரங்கன் 'கணையாழி' இதழை நடத்திக் கொண்டிருந்த காரணத்தினால் இது இயல்பாக நடந்தது. கணையாழிக்கு வரும் படைப்புகளை யாராவது ஒருவர் படித்துக் கொண்டு வர, அது பற்றியெல்லாம் நாங்கள் விவாதிப்போம். உண்மையிலேயே படித்துக் கொண்டு வருவார்கள்.

விளம்பரம்: எழுத்தாளர் ஆதவன் உங்களுக்குப் பள்ளிக்கூடத்தில் மாணவர் என்று படித்த ஞாபகம்?

தொடர்ச்சி 12ஆம் பக்கம்...)


சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்: காலை 7am - மாலை 9pm
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416.754.7338 / 416.724.7480
3011 Markham Road, Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

# நெல்லியடி சமூக அறக்கொடை அமைப்பின் கல்விப்பணி



யதுசனா சவுந்தரராசா

*Nelliady Community Charity -NCC*

கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே - என்பது ஆன்றோர் வாக்கு. வாழ்வில் எத்தகைய இக்கட்டான சூழ்நிலை ஏற்பட்டாலும் கல்வி கற்பதைக் கைவிடலாகாது. வாழ்வின் அறியாமை எனும் இருளை நீக்கி வாழ்வை ஒளிமயமாக்குவது கல்வியேயாகும். அத்தகைய கல்விச் சேவையில் பிரதிபலனை எதிர்பாராது மாணவர்களுக்கு அளப்பரிய பொருளாதார உதவிகளை செய்துவரும் சான்றோர் போற்றுதற்குரியவர். அந்தவகையில் அண்மையில் நான் பார்த்து வியந்த கல்விச் சேவைபற்றிப் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். நெல்லியடி சமூக அறக்கொடை அமைப்பு (Nelliady Community Charity) எனும் அமைப்பானது வடமராட்சியில் உள்ள முன்னணி சமூகசேவை அமைப்பாகும். அவர்களின் வருடாந்த ஒன்றுகூடல் வைபவமானது அண்மையில் நெல்லியடி மத்திய கல்லூரி கலையரங்கத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வின் மூலமாக அவர்களின் தன்னலமற்ற கல்வித்தொண்டு பற்றி அறிந்து வியந்தேன்.

2016ஆம் ஆண்டளவில் ஒரு சிறுதொகையான வளங்களுடன் ஆரம்பிக்கப்பட்டு காலப்போக்கில் விரிவடைந்து மேலும் பல சமூக நலன்விரும்பிகள், வெளிநாட்டில் வாழும் உறவுகளுடன் கைகோர்த்து இன்று பெரியதோர் சமூகசேவை அமைப்பாக நெல்லியடியில் தலை நிமிர்ந்து நிற்கிறது நெல்லியடி சமூக அறக்கொடை அமைப்பு. மாணவர்களின் கல்விக்கு வறுமை ஒரு தடையாக அமைந்து விடக்கூடாது என்பதற்காக வறிய மாணவர்களின் கல்விக்கு ஒளி விளக்காக விளங்கும் மதிப்பிற்குரிய திரு. சிவாஸ்கரன் ஐயா அவர்களின் கருப்பொருளிலேயே இவ்வமைப்பானது தோற்றம் பெற்று இன்றுவரையிலும் இச் சேவையை திறம்பட நடத்தி வருகின்றனர்.

நெல்லியடி சமூக அறக்கொடை அமைப்பானது வடமராட்சிப் பிரதேசத்தைத் தளமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டப் போதிலும், அவர்களின் சேவையினை குறித்த பிரதேசத்திற்கு என்று மட்டுப்படுத்தாது இலங்கையின் பல பாகங்களி லும் இருக்கும் மாணவர்களுக்கும் தேவையான பொருளாதார உதவிகளை செய்து வருகின்றனர். அந்த வகையில் கரவெட்டி, புதுக்குடியிருப்பு, துணுக்காய், மருதங்கேணி, கோப்பாய், தெல்லிப்பழை, வாழைச்சேனை, உடுவில, ஊவா - பரணகம், செட்டிக்குளம், கரைச்சி, சண்டிலிப்பாய் போன்ற பிரதேசங்களில் வாழும் மாணவர்களும் இவர்களின் சேவைக்குள் உள்வாங்கப்பட்டமையானது அவர்களின் பரந்த மனப்பான்மையை வெளிப்படுத்துகிறது.

பொருளாதார நிலையில் பின்தங்கிய மாணவர்களுக்கு முறையே ஆரம்பப் பிரிவிற்கு ரூ.500உம் தரம் 6 - 9 வரையான மாணவர்களுக்கு 1000 ரூபாவும் தரம் 10 - 11 மாணவர்களுக்கு ரூ.1500உம், உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு ரூ.2000உம் என்ற வகையில் மாதாந்த உதவித்தொகையாக வழங்கி வருகின்றனர். இதன் மூலமாக மாணவர்கள் தமது மேலதிக வகுப்பிற்கான பணத்தை செலுத்திக்கொள்ள முடிவதுடன், தேவையான கற்றல் உபகரணங்களைக் கொள்வனவு செய்துகொள்ளவும் இயலுமானதாக அமைகின்றது. மேலும், பல்கலைக்கழக மாணவர்களுக்கும் மாதாந்தம் ரூ.5000 அவர்களின் கல்வித் தேவைக்காக வழங்கப்படுகின்றது. கல்வியினூடாக சுய பொருளாதாரத்தை வளர்த்து சமூக மேம்பாட்டை நோக்கமாகக் கொண்ட இவ்வமைப்பினர் மாணவர்களின் கல்வியில் அனைத்துவிதமான உதவிகளையும் செய்து வருகின்றனர். அதாவது, மாதாந்த பண உதவி மட்டுமல்லாது இணையம் மூலமான கல்விக்காக மடிக்கணினி, ராப் (Laptop, Tab) போன்ற சாதனங்களும், போக்குவரத்துத் தேவைக்காக துவிச்சக்கர வண்டிகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

கடந்த ஆண்டுகளில் ஏற்பட்ட அசாதாரண நிலைமையின்போது, மாணவர்களுக்கு இணையம் மூலமான கல்விக்கு வசதியை ஏற்படுத்திக் கொடுத்தமையானது அளப்பரிய உதவியாகும். இவை மட்டுமன்றி மின்வசதியற்ற மாணவர்களின் வீடுகளுக்கு மின்சார இணைப்பை ஏற்படுத்திக் கொடுத்தல், சேதமடைந்த வீடுகளைப் புனரமைத்துக் கொடுத்தல், மாணவர்களுக்கு கற்றலுக்காக தளபாடங்களை வழங்குதல் என்றவாறாக இவர்களின் சேவைகள் எல்லையற்றவை. நெல்லியடி சமூக அறக்கொடை நிலையத்தின் வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வின்போது அவர்களின் குறிக்கோள் பற்றிக் கூறுகையில், "மாணவர்களின் கல்வியில் பொருளாதார ரீதியில் ஏற்படும் தடைகளை இழிவளவாக்கல்" மற்றும் "புலமையான, பொருளாதார ரீதியில் நலிந்த மாணவர்களின் குடும்பங்களை இனங்கண்டு உதவுதல்" ஆகியவற்றைக் குறிப்பிட்டனர். உண்மையில் மிகவும் உன்னதமான பணியை ஆற்றிவரும் இச்சான்றோர் போற்றத்தக்கவர்கள். இப்பணியில் வெளிநாடுவாழ் உறவுகளின் வகிபங்கு பற்றிக் குறிப்பிடுகையில், அவர்கள் தமது வருமானத்திலிருந்து ஒருபகுதியை

தொடர்ச்சி 17ஆம் பக்கம்...)

கோவிட்-19 தடுப்பூசிகள் பற்றிய கேள்விகள் உள்ளதா?

211 ஃபோன் லைன் ஆங்கிலம், பிரஞ்சு மற்றும் 200க்கும் மேற்பட்ட பிற மொழிகளில் உங்களுக்குத் தேவையான தகவல் அல்லது உங்களுக்கு உதவக்கூடிய ஆதாரங்களைக் கண்டறிய உதவும்.

இந்த சேவை இலவசம் மற்றும் ரகசியமானது.

211 ஐ அழைக்கவும்.

211®

Votre gouvernement | Québec

# தமிழின்...

10ஆம் பக்கத்தொடர்ச்சி

இந்திரா பார்த்தசாரதி: ஆமாம், அதுபற்றி சொல்லியுள்ளேன். பள்ளிக் கூடத்தில் மூன்று வருடம் ஆதவன் என் மாணவனாக இருந்தான். கூச்ச சுபாவம் உள்ளவன். யாருடனும் பேசமாட்டான். எங்களுக்கு ஆசிரியர் - மாணவன் என்கிற முறையான ஓர் உறவு முறை இருந்ததில்லை. நாங்கள் நல்ல நண்பர்கள். என்னைப் பார்க்க அடிக்கடி வீட்டிற்கு வருவான். நான் பேசிக்கொண்டே இருப்பேன். இரண்டு மணி நேரம், மூன்று மணி நேரம் என்று நீளும். அவன் கேட்டுக்கொண்டு மட்டும் இருப்பான். கடைசியில் போகும் போது, "நாம் மிகச் சுவாரஸ்யமாக விவாதித்துக் கொண்டிருந்தோம்" என்று ஆங்கிலத்தில் சொல்வான். எங்கள் வீட்டில் சொல்வார்கள், "என்ன பெரிய விவாதம். நீங்க பேசிக் கொண்டிருந்தீங்க, அவர் கேட்டுக் கொண்டிருந்தார்" என்று. சின்ன வயதிலேயே போய்விட்டான்.

விளம்பரம்: நீங்கள் தமிழ்ப் பேராசிரியராக இருந்த போதே படைப்பாளியாகவும் இருந்திருக்கிறீர்கள். பொதுவாகத் தமிழ்ப் பேராசிரியர்களுக்கும் இன்றைய இலக் கியத்துக்கும் அதிக இடைவெளி உண்டு. இந்த நிலைக்கு என்ன காரணம்?

இந்திரா பார்த்தசாரதி: டில்லியில் முனைவர் ஆறுமுகம் என்ற ஒரு பேராசிரிய நண்பர் இருந்தார். அவரை ஒரு கூட்டத்தில் ந. பிச்சமூர்த்தியை பற்றி பேசக் கூப்பிட்டிருந்தனர். ந. பிச்ச மூர்த்தியை யார் என்று அவருக்குத் தெரி யாது. என்னிடம் வந்து கேட்டார். நான் என்னிடம் இருந்த ந. பிச்சமூர்த்தியின் புத்தகங்களைக் கொடுத்து படித்துப் பார்க்க சொன்னேன். ஆச்சரியம் என்ன வென்றால் அவருக்கு ந. பிச்சமூர்த்தி மிகவும் பிடித்துப் போய்விட்டது. இலக்கிய ரசனை உள்ளே இருந்திருக்கிறது. படித்த தில்லை, அவ்வளவுதான். இன்றைய இலக்கியத்தில் ஒன்றுமே இல்லை என்ற மனத்தடை காரணமாக அவர் இந்தப் பக்கமே வரவில்லை.



பொதுவாகத் தமிழ் படிக்க வருவோர் வேறு எங்கும் இடம் கிடைக்காமல் வரு வோர் அவர்களுக்குத் தமிழ் மட்டுமல்ல, வேறு எதிலும் ஆர்வம் இருக்காது. இவர்கள் எண்ணிக்கையில் கணிசமானோர். தமிழ்நாட்டில் தமிழ் ஓர் அரசியல் கோலமாக உருமாறிய பிறகு ஏற்பட்ட நிலைதான் இது என்பது கவனிக்கத் தக்கது. இலக்கிய ரசனை பின்தள்ளப் பட்டு மொழி வெறி மேலெழுந்து வந்துவிட்டது. இவர்களை ஒன்றும் சொல்வதற்கில்லை. மீதியுள்ளவர்கள் முனைவர் ஆறுமுகம் போன்றோர்.

இன்னொரு புறம் தமிழில் இன்றைய இலக்கியத்தில் ஈடுபாடு உள்ளோரிடம் மரபைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற ஆர்வம் இல்லை. புதுமைப்பித்தன் மட்டும் விதிவிலக்கு. மரபே தெரியாமல் எப்படி மரபை மீற முடியும்? இங்கு எந்த மரபை மீறுகிறோம் என்பதைப் பற்றிய அக்கறையில்லாமலே மரபை மீறுவது நடந்தது.

விளம்பரம்: நாடகம் எழுத எப்படி வந்தீர்கள்?

இந்திரா பார்த்தசாரதி: 'மழை' என்பதுதான் என்னுடைய முதல் நாடகம். முதலில் அதை ஒரு நாவலாகத்தான் திட்டமிட்டிருந்தேன். மொத்தம் நான்கு கதாபாத்திரங்கள். ஆனால், எழுதத் தொடங்கிய பிறகு நாடகத்தில் இக்கதை நன்றாக வரும் என்று பட்டது. எழுதும் போது 'மழை' மேடையேற்றப்படுமா என்பது குறித்து நான் யோசிக்கவில்லை. டெல்லியில் தச்சின நாடக மன்றம், 'ஒரு கதாநாயகி கொடுங்கள், மேடை ஏற்றுகிறோம்' என்று சொன்னார்கள். ஏனெனில், அவர்களிடம் இருந்த நடிகை கள் இந்த நாடகத்தின் வசனங்களைப் பேச மறுத்து விட்டனர். அப்புறம் எதேச்சையாக டில்லியில் க.நா.சு.வின் மகள் யமுனாவைப் பார்த்தபோது, "நீ நடிக்கிறாயா?" என்று கேட்டேன். உடனே நடிக்கிறேன் என்று சொல்லிவிட்டாள். அதனால், 'மழை' மேடையேறியது.


மழையில் நடித்த மணியும் யமுனாவும் நட்பு ஏற்பட்டு காதலாகி மணம் செய்து கொண்டனர். என்னுடைய நாடக மேடையேற்றத்தில் இதுபோல் நிறைய நடந்திருக்கிறது. இலங்கையில் 'மழை' மேடையேறிய போது அங்கே நடித்த பாலேந்திராவுக்கும் ஆனந்திக்கும் திருமணம் நடந்தது. இதுபோல் இன்னும் நான்கைந்து காதல் திருமணங்கள். இந்திரா பார்த்தசாரதி நாடகத்தில் நடித்தால் திருமணம் ஆகிவிடும் என்று மற்றவர்கள் கிண்டலாகச் சொல்லும் அளவுக்கு நிறைய நடந்திருக்கிறது.

விளம்பரம்: உங்களுடைய கதைகளில் அதிகமும் வசனங்களில் ஆக்கிரமிப்பு உள்ளது. விவரணங்கள் மிகக் குறைவுதான், ஏன் இப்படி?

இந்திரா பார்த்தசாரதி: வெங்கடசாமி நாதன் ஒரு முறை முதலில் என்னுடைய நாடகத்தைப் பார்த்துவிட்டு, "நீங்கள் நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள் நாம் நாவல்கள், சிறுகதைகள்

தொடர்ச்சி 18ஆம் பக்கம்...)


For Rent in Scarborough



3 Bedroom (Main Floor)

- 1 Full + 1 Half Wash Room
- New Counter Top
- New Fridge
- New Washer / Dryer (Separate Laundry)
- Single Garage
- Outside Parking

KENNEDY / LAWRENCE

For Rent in Ajax



2 Bedroom (Basement)

- Walk out
- 1 Full Washroom
- Separate Laundry
- 1 Parking available

ROSSLAND / RAVENSCROFT

உங்கள் ஆதனங்களை விற்க / வாங்க / வாடகைக்கு கொடுக்க எங்களை நாடுங்கள்.

HOMELIFE HomeLife/GTA Realty Inc. Brokerage*

5215 Finch Ave. E. Suite 203, Toronto, ON. M1S 0C2

* Independently owned and operated.

Please Call

George Paranthaman

416 277 9044

## BASEMENT FOR RENT

***MARKHAM & 16TH AVE.***
Room or Basement for rent.
Close to all facilities.
Avail. April 01st, 2022.
***Please call: 647-444-4712***

---

**KENNEDY & DENISON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, 1parking, laundry, Utilities. Women/ Students Preferred. Avail. immediately.
**905.479.9510 / 416.875.7146**

---

**MARKHAM & DENISON**
1 Bedroom walk - out bsmt for rent. Parking, laundry. Also 1 bedroom in upstairs at **MARKHAM & SHEPPARD**
தொடர்புகளுக்கு: **647.339.2560**

---

***MCCOWAN & STEELES***
1 Bedroom bsmt for rent. Sep. ent., parking, laundry. washroom.
2 Mins. to TTC & YRT. Avail. May 01, 2022.
தொடர்புகளுக்கு: ***416.727.4545***

---

**MARKHAM & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Parking, laundry. Avail. May 01, 2022. No pets, no smoking.
தொடர்புகளுக்கு: **647.675.4799**

---

**BOCK ROAD & ROSSLAND**
2 Bedroom bsmt for rent.
Sep. entrance, parking, laundry,
Avail. immediately.
தொடர்புகளுக்கு: **437.992.4869**

---

**MORNINGSIDE & MCNICOLL**
1 Bedroom bsmt for rent. Sep. entrance. Couple or students preferred. Parking, laundry. Avail.May 01, 2022.
தொடர்புகளுக்கு: ***647.669.0669***

---

**NEILSON & FINCH**
1bedroom bsmt for rent. Sep. ent. Parking, laundry. Close to Eraa super market & Finch bus. Avail. May 15, 2022.
தொடர்புகளுக்கு: ***647.628.6991***

---

***MARKHAM & ELSON***
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities.
Avail. immediately
தொடர்புகளுக்கு: ***647.505.7951***

---

**STAINES & STEELES**
3 bedroom bsmt for rent. Sep. ent., parking, sep. laundry. Close to all facilities.
Avail. May 01, 2022.
தொடர்புகளுக்கு :**647.889.3217**

---

**MARKHAM & SHEPPARD**
2 Bedroom walk-out bsmt for rent.
Parking, laundry. Avail. immediately
தொடர்புகளுக்கு: ***647.531.4966***

---

**BELLAMY & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, 1 parking, laundry.Close to mall,school, TTC. Family preferred.Avail. immediately.
**647.806.5987 / 647.710.8479**

---

**MARKHAM & LAWRENCE**
Newly renovated 2 Bedrooms bsmt for Rent. 1 parking Close to Cedarbrae Mall, TTC, Schools, Banks, etc. Avail immediately.
**647.780.6500/ 416.289.3685**

32ஆவது ஆண்டில்
# விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
**Tel: 416-282-8059**
**email: vlambaram@sympatico.ca**
**www.vlambaram.com**
**www.tamilvanakkam.com**

## BASEMENT FOR RENT

**PORT UNION & LAWSON**
2 Bedrooms bsmt Apartment for rent.
Sep. entrance, 1 parking, laundry.
Avail. Immediately.
தொடர்புகளுக்கு : **416.831.4725**

---

**NEILSON & TAPSCOTT**
1bedroom bsmt for rent. Room also available. couple or female preferred close to all facilities. Avail. immediately
**Call 416.875.4257**

---

**KENNEDY & LAWRENCE**
3 bedroom bsmt for rent. Sep. entrance, Parking, laundry. Close to all facilities.
Avail. Avail. immediately.
தொடர்புகளுக்கு : **416.826.3870**

---

**MARKHAM & STEELES**
2 bedroom bsmt for rent. Sep. entrance. parking, laundry. Close to all amenities.
Avail. April. 01, 2022.
**647.678.0611 / 416.587.6564**

---

**MCCOWAN & DENISON**
1 bedroom bsmt for rent. Kitchen & washroom with Sep. entrance.
Avail. immediately.
தொடர்புகளுக்கு : **416-836-5284**

---

**JANE & LAWRENCE**
2 bedroom bsmt for rent. Sep. entrance, 1 parking, near fresco & no frills.
தொடர்புகளுக்கு : **416.473.7396**

---

**WESTNEY & HWY 401 (AJAX)**
1 Bedroom BSMT for rent. Sep. entrance, 1 parking, laundry. Rent+30% utilities. No smoking / no pets. Avail. May 01, 2022.
தொடர்புகளுக்கு : **647.885.5676**

---

**MORNINGSIDE & Morning view trail**
Newly renovated 2 bedroom bsmt for rent.
Sep. entrance. 1 parking, laundry.
No smoking/ No pets. Avail. April 01, 2022.
தொடர்புகளுக்கு : **647.531.6930**

---

**MIDLAND & EGLINTON**
2 bedroom newly renovated bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to Kennedy subway. Avail. immediately.
**416.750.0363 / 437.925.4063**

---

**WESTNEY & ROSSLAND**
2 Bedroom bsmt for rent. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு : **647.545.9204**

---

**MORNINGSIDE & NEILSON**
1 bedroom bsmt for rent. Sep. entrance. Close to all facilities. Couple preferred. Avail. immediately.
**416.455.5546 / 647.334.0072**

## BASEMENT FOR RENT

**MARKHAM & STEELES**
2 Bright Bedroom +1 washroom Bsmt for rent. Sep. entrance, Sep. laundry. 1 parking. Close to all facilities.
**Contact : 416.909.2433**

---

**MIDLAND& FINCH**
BSMT for rent. ROOM Also Available. Schools & more. Couple or female preferred.
தொடர்புகளுக்கு : **647-529.7320**

---

**NEILSON & TAPSCOTT**
Newly renovated 1 bedroom bsmt for rent . Sep. entrance, parking, laundry.
Avail. immediately.
**647.641.4440 / 416.878.0388**

## ROOM FOR RENT

**MARKHAM & DENISON**
1 room for rent in a house. 1 Parking, laundry, internet.Close to all facilities.
Avail. immediately.
தொடர்புகளுக்கு : **416.826.8811**

---

**MORNINGSIDE & MCNICOLL**
2 rooms for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, school. Avail. immediately.
**Contact: 416-258.3256**

---

***MCCOWAN & SHEPPARD***
1 Room for rent in a luxury condo. (ground floor). Sep.washroom. Female preferred. Avail. immediately.
***647.760.3376 / 647.835.3376***

---

**BRIMLEY & STEELES**
1 Room for rent in a 2 bedroom bsmt apt to share with another girl. Female only. Sep. entrance .Close to TTC.
Avail. immediately.
தொடர்புகளுக்கு : **416.894.8349**

---

**TAPSCOTT & MCLEVIN**
A single, large bedroom with shared accommodation with a furnished Kitchen and washroom. Parking, laundry. Avail. immediately. Only female tenant.
**Contact: 416.262.4973**

---

**Ajax- Roseland & Audley**
Furnished room for rent. Avail. immediately. Very convenient location. Working woman or reliable girl students.
**Contact- 647.871.4862 or**
**email - jenit_19@yahoo.com**

---

**WARDEN & FINCH**
Room for rent with food.
முதியோர் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு :**647.667.0482**

## ROOM FOR RENT

**9TH LINE & HWY 7**
1 bedrooms for rent with attached washroom. Female only.
Avail. immediately.
**Contact: 416.737.1146**

---

**Kennedy & HWY 401**
Room for rent in main floor.
Female preferred. Avail. April 01, 2022.
தொடர்புகளுக்கு : **437.256.2178**

---

**9TH LINE & 14TH AVENUE**
Room For rent. Parking, laundry, internet. Close to YRT, other all facilities.
Avail. Immediately.
**416.648.1987 / 416.669.3549**

---

**MARKHAM & 14Th AVENUE**
1 bachelor Bedroom for rent. Parking, laundry, utilities. Close to school, shops, park & YRT. Avail. immediately.
**(647) 500-4564 / (905) 472-1370.**

---

**MARKHAM & ELLESMERE**
Room for rent in the two bedroom basement. Wifi available.
தொடர்புகளுக்கு : **647.996.6977**

---

**MIDDLEFIELD & FINCH**
Room For rent in a condo( 4th floor) . Available for couple. Rent $1000. Sep. washroom, shared Kitchen.
**Contact: 647.835.5244**

---

**BRIMLEY & EGLINTON**
2 Room for rent. Laundry.
No smoke. Close to all facilities.
Avail. immediately.
தொடர்புகளுக்கு : **416.294.0193**

## BASEMENT FOR RENT

***MIDDLEFIELD & ELSON***
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, Utilities.Close to all facilities.
Avail. immediately.
***905.201.7901 / 647.787.8043***

## BASEMENT FOR RENT

**PHARMACY & FINCH**
2 br walk-out bsmt for rent. Sep.ent., parking, laundry. Close to TTC, mall,schools & hospital. Avail. immediately.
தொடர்புகளுக்கு: ***647.588.5490***

## HOUSE FOR RENT

**MARKHAM / SHEPPARD**
3 Bedroom main flr,1 Bedroom basement, sep. entry, laundry & parking.
Avail. Immediately.
தொடர்புகளுக்கு :**289.923.3062**

மேலும் பக்கங்கள் 13,15,16,17

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை 5 நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

## BASEMENT FOR RENT
**MARKHAM & STEELES**
1 bed room + den Bsmt avail. April 01 or May 2022. Female Studens or seniors or couple. Rent + including utilities.
தொடர்புகளுக்கு : **647-219-7704**

## BASEMENT FOR RENT
***MCCOWAN & HIGHGLEN***
2 Bedroom bsmt apt. for rent. Sep. entrance. Washer, dryer, fridge, stove, dishwasher &1 parking . Avail. immediatley. Prefer small family. Rent $1350.
***Pls. Call - Sarves: 416.726.8403***

## BASEMENT FOR RENT
**MARKHAM & DENISON**
3 Bed room bsmt for rent. Sep. ent. , parking, laundry. Close to all facilities. Avail. Immediatley.
***Contact: 647.703.3254***

## BASEMENT FOR RENT
**MARKHAM & DENISON**
Newly renovated 1 Bedroom bsmt for rent. Sep. entrance, 1 Parking, laundry.Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு : **416.312.7863**

## BASEMENT FOR RENT
**MARKHAM & 14TH AVE.**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, Sep. laundry. 1 Parking. Rent+ utilities. 3 minute to 14th ave. 5 minute to Markham rd. Avail. April 01, 2022.
தொடர்புகளுக்கு : **416.722.1853**

## BASEMENT FOR RENT
**BRIMLEY & FINCH**
1 Bedroom walkout bsmt for rent. 1 Parking, laundry. Rent+ utilities 40%. Close to all facilities. Avail. April 01, 2022.
**416.298.0134 / 647.449.7709**

## BASEMENT FOR RENT
**MCCOWAN & STEELES**
2 Bedroom Basement for rent. Sep. entrance. Parking, laundry. 3-minutes walking distance to steeles Road. Steps to school. No pets & No Smoke.
தொடர்புகளுக்கு: **647.991.4437**

## BASEMENT FOR RENT
**MARKHAM & MCNICOLL**
**MORNINGSIDE & FINCH**
1 Bedroom huge walkout bsmt for rent. Sep. entrance, Parking, laundry. Close to TTC, school, mall. No smoke & Pets. Couple or single preferred. Avail. immediately.
**416.298.7081 / 416.417.9541**

## BASEMENT FOR RENT
**MORNINGSIDE & SHEPPARD**
Brand new1br bsmt for rent. Sep. ent., laundry. 3 Minutes to TTC ,bus- stops. Close to Uof T, Centennial College. Including utilities. Avail. immedietley. No smoking / no pets.
தொடர்புகளுக்கு: ***647.273.4225***

## BASEMENT FOR RENT
**MIDDLEFIELD & DENISON**
2 Bed room bsmt for rent. Sep. ent. , parking, laundry. Including- Utilities. Close to all facilities. Avail. immediatley.
***Contact: 647.768.1499***

## BASEMENT FOR RENT
**ELLESMERE & MORRISH ROAD**
Newly renovated large 2 bedroom bsmt for rent. 1Parking, shared laundry. Minutes to HWY 401, TTC bus stops (95 & 905 ), U of T, Centennial College. $1800 including utilities. Avail. immediatley. No smoking , no pets.
தொடர்புகளுக்கு: ***416.893. 4630***

## BASEMENT FOR RENT
**MCCOWAN & STEELES**
2 Bedroom bsmt for rent. Sep.entrance, parking, laundry. Close to school & ather all facilities. Couple / small family preferred. Avail. immediately.
**905.471.1406 / 416.627.5184**

## BASEMENT FOR RENT
**KINGSTON RD & CHURCH ST.**
***1639 Marshcourt Drive***
2 br. bsmt for rent. Sep. ent. Walking distance to Pickering Town Center. Close to Go station, public transportation & school. Avail. immediately.
தொடர்புகளுக்கு: ***416.457.7162***

## BASEMENT FOR RENT
**MIDDLEFIELD & STEELES**
Newly renovated 2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, washroom. Close to TTC, school, mall, bank. No pets. First & Last month rent. Avail. immediately.
**647.964.8434/416.560.2411**

## BASEMENT FOR RENT
**MORNINGSIDE & MORNINGVIEW**
Newly renovated 2 br bsmt for rent. Sep.ent., parking, laundry, 2 washrooms. Close to TTC ,Tamil stores. Students /couple /small family preferred. Avail. May 01, 2022.
தொடர்புகளுக்கு: ***416.770.0178***

## BASEMENT FOR RENT
**NEILSON & SHEPPARD**
3 Bedroom bsmt for rent. Sep. ent., parking, 2 full washrooms, laundry. Close to all facilites. Avail. May 01, 2022. No smoking, no pets.
தொடர்புகளுக்கு: ***647.297.3502***

## BASEMENT FOR RENT
**MORNINGSIDE & FINCH**
3 bedroom bsmt for rent. Sep.ent., parking, laundry, cable, internet, utilities. Close to TTC, shopping, school, park. Avail. May 01, 2022.
***416. 854.6045 / 416.219.5186***

## BASEMENT FOR RENT
**MARKHAM & 14th AVE.**
2 bed room bsmt for rent. 1 washroom, Sep. entrance. Avail. immediately.
தொடர்புகளுக்கு: ***647.296. 7932***

## BASEMENT FOR RENT
**MARKHAM & HWY 7**
3 bedroom+den basement for rent. Sep. entrance. 2 parking, 2 washroom. Avail. immediately.
**Room also available.**
தொடர்புகளுக்கு: **613.970.8333**

## ROOM FOR RENT
**WARDEN & FINCH**
1 bedroom for rent. Rent & Utility included. Available Immediately.
தொடர்புகளுக்கு:
**437.929.6639**

## BASEMENT / ROOM FOR RENT
**MORNINGSIDE & STAINES**
3 bedroom walkout basement with 2 full washroom & laundry room for rent. Avail. Immediately. Room for rent in main floor . Ladies only.
தொடர்புகளுக்கு : **647-888-9437**

## APARTMENT FOR RENT
**KENNEDY & EGLINTON**
1 Bedroom apartment for rent. Close to all facilities.
**Contact: 647. 763.2760**

## ROOM FOR RENT
**MCCOWAN & DENISON**
One bedroom for Rent. All inclusive. Avail. immediately
தொடர்புகளுக்கு: ***416.522.3314***

## ROOM FOR RENT
***MORNINGSIDE & NIGHTSTAR***
1 Room for rent. Sep.washroom, parking, laundry, cable, internet. Female preferred. Close to all facilities. Avail. immediately.
***416.332.1513 / 647.980.1513***

## ROOM FOR RENT
***FINCH & WARDEN***
1 Room for rent in a condo.Close to mall, hospital, TTC, all the major banks. Ladies preferred. Avail. immediately.
***Call / or Leave message***
***647.648.8822 / 647.504.5662***

## HOUSE/BASEMENT FOR RENT
**TAPSCOTT & CROWTRAIL**
1 Bedroom basement for rent.
**STAINES & MORNINGSIDE**
2 Bedroom walkout basement for rent
3 Bedrooms house for rent.
**Contact: 647.686.8590**

## ROOM/BASEMENT FOR RENT
**BELLAMY & ELLESMERE**
2 **Rooms** are available on upstairs for April first week. (Working women only). **Walkout bsmt** for rent. Avail. April first week. laundry, 1 parking is permitted. Closed to TTC. (Working people only)
**Please contact (647) 852-6807**

## ROOM FOR RENT
**KENNEDY & EGLINTON**
1 Room for rent in a 2 bedroom aprt. Working Students, 65+seniors preferred. Close to TTC, Kennedy subway. No pets, smoking, drinking. Avail. immediately
**416.857.5252 / 416.752.4444**

மேலும் பக்கங்கள் 13,15,16, 17

## வாகன போக்குவரத்து

விமானநிலையம், நயகரா நீர்வீழ்ச்சி மற்றும் நீண்ட தூர, குறுகிய தூரப் பயணங்களுக்கு

அழையுங்கள்: **416.880.5952**

## HOUSE FOR RENT

***McCowan & Lawrence***

3 bedroom house for rent . Parking. Within 10 minute drive to the Scarborough Town Centre, Hospital, grocery stores, banks, schools & located in front of a bus stop.

***Contact: 647-309-9909***

## HOUSE FOR RENT

**KENNEDY-LAWERENCE-MIKEMYERS**

(SUBWAY-TRAIN-BUSES & HWY 401)

Very convenient location. 3 bedroom, living hall, kitchen with all facilities. Fridge ETC... 2 washrooms. 1 indoor parking.

Please call Tel: **416.285.4695 or 647.719.5853**

## HOUSE FOR RENT

**Ajax - HWY 401**அருகே **Salem & Rossland** இல் அமைந்துள்ள வீடு வாடகைக்கு ஏப்ரல் 01stலிருந்து கிடைக்கும். **4 bedrooms, 3 baths.** குறைந்த காலத்திற்கும் கிடைக்கும். தொடர்புகளிற்கு.

**514.965.6064 / 438.879.6064**

## HOUSE FOR RENT

**MARKHAM & 14TH AVENUE**

3 Bedroom house for rent. 3 washroom, parking, laundry. Avail. Immediately.

தொடர்புகளுக்கு:

**647.296.7932**

## *ROOMS FOR RENT*

***MORNINGSIDE & SEWLLES***

Multiple bedrooms available with bathroom & kitchen. Close to TTC (2 Buses).

Contact owner about renting price.

தொடர்புகளுக்கு: ***416.908.9494***

## வாடகைக்கு கொடுத்திட, பெற்றிட

Rooms: 5 BR, 4 BR, 3 BR, 2 BR, 1 BR APT, House, Condo, Basement GTA, TORONTO, Scarborough, york, Peel, Durham, Halton ஆகிய பகுதிகளில்

**A1 Canada Rental Services**

**MR Ratha Francis Xavier**

**416.857.5252 / 416.752.4444**

## Air B & B in Jaffna

கோண்டாவில் - யாழ்ப்பாணம்

**A full house for Rent. 5 Bed rooms , 4 Washrooms, Security Camera, Secturity Guard, A/C, 3 Parking. US$40/ Per day**

**SRI: 416.568.4743**

**Thileepan - 94.77.196.9829**

## *BASEMENT FOR RENT*

***BRIMLEY & LAWRENCE***

2 bedroom bsmt for rent. Sep. ent. Utilities included. Close to all facilites. Avail. immediately. South Asians விரும்பத்தக்கது. தொடர்புகளுக்கு:

***Arul - 647.382.5190 / Mary - 647.614.8558***

## வாடகைக்கு

**4 BR, 3 BR, 2 BR, 1 BR**

**House, Condo, Basement**

வாடகைக்கு உள்ளது.

அழையுங்கள்- **647.861.8240**

## காணி விற்பனை

திருகோணமலை அலஸ்தோட்டத்தில் Kentower - Lyca கட்டிடத்தின் அருகே சுற்றுலாப் பகுதியில் நடக்கும் தூரத்தில் கடற்கரை, புல்மோட்டை சாலையுடனும் மின்சார, குழாய்கிணறு வசதியுடனும் கூடிய 20 பேர்ச் உறுதிக்காணி விற்பனைக்கு. விலை 5 லட்சம் ஃபேர்ச்.

தொடர்பு - ***647-205-8317***

## *BASEMENT FOR RENT*

***14th AVE. & BOXGROVE***

Modern & luxury finishing 2 br. bsmt for rent. Sep. ent., parking, laundry, cable, internet. Quarts counter top, new stainless appliances & full spotlight. Close to all amenities. Avail. immediately.

தொடர்புகளுக்கு: ***647.627.0071 / 647.501.7690***

## STAR PAINTING & RENOVATION

Commercial & residential general work. Free Estimate. 20% Discount.

**416.315.9348**

**senthi0115@gmail.com**

## வீடு வாடகைக்குபெற்றிட / கொடுத்திட

வாடகைக்கு வீடுகள், Condo, Bsmts போன்றவற்றை Scarborough, Markham, Mississauga, Brampton, Ajax பகுதிகளில் பெற்றிட அழையுங்கள்:

**647.402.2937**

## HOUSE / BASEMENT FOR RENT

**MARKHAM & SHEPPARD:** 3 bedroom+ 2 washroom bsmt forrent. Rent $1,600 + 50% utilities. No alcohol, No pets,No smoking.

**MARKHAM DENISON:** 2 bedroom+ 1 washroom **house** for rent. sep. laundry. Rent $1800 inclcoding utilities. No alcohol, No pets, No smoking.

**647.507.2148 / 647.864.1051**

## மணமகள் தேவை

1984 இலங்கையில் பிறந்த கனேடிய குடியுரிமை பெற்று நல்ல உத்தியோகத்தில் உள்ள மணமகனுக்கு மணமகளை தேடுகிறோம்.

தொலைபேசி: **365-654-0777**

## முதியோர் பராமரிப்பு

முதியோருக்கு 24 மணி நேர பராமரிப்பு மற்றும் சுடச்சுட உணவு இலங்கை முறைப்படி சமைத்து வழங்கப்படும். நீண்ட கால குறுகிய கால பராமரிப்பு வசதி வழங்கப்படும்.

**647.512.9820 / 647.868.2440**

## HOUSE FOR SALE IN COLOMBO 03

**Location-** Muhandiram Road, Colombo 03 / Close to Kollupitiya Police Station . 5.5 perch (2024.04 Square ft) one story well maintained house (30 plus years) for sale. 3 bedroom with two bathroom, balcony's upstairs, Kitchen and spacious hall.

**Location-** Close to Temple Tree (President House) / USA embassy/ Police station/ Mosque/ Methodist school/Galle Face**.** Price can be negotiable/ Please research about the location / Serious Buyers only / No Agents.

**Contact: (647) 507-3259 /colomboproperty44@gmail.com**

## JUNK REMOVAL

பழைய இரும்பு பொருட்கள், **Electronics** பொருட்கள் வீசுவதற்காக வைத்திருந்தால் இலவசமாக எடுக்கப்படும்.

**MOVING / DELIVERY AVAILABLE.**

**Contact :** பிறேம்-**647.835.5244**

## USED CARS WANTED

USED TOYOTA CARS, VANS WANTED. ANY CONDITION.

**Call: 437.688.6305**

## *BABYSITTER WANTED*

***Scarborough - Victoria Park & HWY 401***

We are looking for a babysitter for a nine(9) month old baby. Female with previous babysitting experience or studying Early Childhood Education is preferred. University or college female students are also welcome. Flexible schedule. Salary and working hours can be negotiated.

***Contact: 416.616.7278***

## JOB JOB JOB

**Markham Rd. & Steeles Ave.**

Take out restaurant looking for a line cook / kitchen help. Full time position.

**Please Contact: 416-321-3456**

## CONVENIENCE STORE FOR SALE

Scarboroughவில் **Brimley & St. Clair** -Brimley beach இற்கு அருகாமையில் 17 வருடகாலமாக நல்ல நிலையில் இயங்கிக்கொண்டிருக்கும் Convenience Store Business விற்பனைக்கு உள்ளது. வாடகை $2,500. மேலதிக விபரங்களுக்கு - **647.703.3254**

## JKR HOME APPLIANCES

Washer, Dryer, Stove, Fridge மற்றும், அனைத்தும் warrenty உடன் திருத்திக்கொடுக்கப்படும். We fix & buy your old appliances . **Please Call: Jeya**

**647.855.6482 / 647.450.8559**

## வேலைக்கு ஆட்கள் தேவை

**THIRUMALLAI EXPRESS** நிறுவனத்திற்கு வேலைக்கு ஆட்கள் தேவை. **GENERAL LABOUR WANTED.**

Moving & Delivery

Free estimates. சகலவிதமான moving தேவைகளுக்கும்

**Anand - 416.834.5219**

## SALES GIRL JOB AVILABLE

**Garesa Fashion**

***2901 Markham & McNicoll*** cornerஇல் அமைந்துள்ள Garesa Fashion Clothing Store looking for a Sales Girl. Work Avilable from Monday to Friday - 4:00pm to 9:00pm, Sunday 12 to 8:00pm.

**Please Contact - Janice - 647.891.0742**

## குழந்தை பராமரிப்பாளர் தேவை

***Scarborough - Victoria Park & HWY401***

9 மாதக் குழந்தையைப் பராமரிக்கப் பெண் பராமரிப்பாளர் தேவை. குழந்தை பராமரிப்பு அனுபவமுள்ள அல்லது குழந்தை பராமரிப்புக் கல்வித் தகைமையுள்ளவர்கள் விரும்பத்தக்கது. பல்கலைக்கழக மற்றும் கல்லூரி மாணவிகளும் விண்ணப்பிக்கலாம்.

வேலை நேரம் மற்றும் சம்பளம் ஆகியவற்றை நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

தொடர்புகளுக்கு: ***416.616.7278***

## வேலைக்கு ஆட்கள் தே வை

**VICTORIAPARK & HWY 401 (Scarborough)**இல் அமைந்துள்ள **ENGLISH PUB**க்கு Experienced **LINE COOK , COOK HELP & WAITRESS** wanted immediately. FULL TIME / PART TIME

**Please contact at 416-566-9994**

## முகாமையாளர் தேவை

மிசிசாகா இந்து ஆலயத்திற்குப் பகுதி நேர, முழு நேர முகாமையாளர் தேவை. தகைமை ஆங்கில அறிவும் கணினி அறிவும் ஓரளவு தெரிந்திருக்க வேண்டும். தமிழ், சமயம் பற்றித் தெரிந்தவராக இருத்தல் வேண்டும். முகாமையாளருக்கான பயிற்சிகள் வழங்கப்படும். தங்குமிட வசதி தேவைப்படின் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு: **647-782-8060 / 416-455-8836**

## விமலம் திருமண சேவை

தங்கள் தேடுதலுக்கும் தகுதிக்கும் ஏற்ற மணமகன்/மணமகள் எம்மிடம் தாராளமாக உள்ளன. தேவையெனில் எம்முடன் தொடர்பு கொள்ளவும். வயது 28, கனடா சிற்றிசன், நட்சத்திரம் அனுசம், பாவம் 45, work - Nursing, Ryson university RN பட்டதாரிக்கு மணமகன் தேவை. 19.02.87 லண்டன் சிற்றிசன் இல்லை, நட்சத்திரம் சுவாதி, பாவம் 191/2, கல்வி BBA Management லண்டனில் விசா உள்ள மணமகள் தேவை. தொடர்புகளுக்கு : **437.244.6737**

## AZ DRIVER WANTED

Hiring AZ Drivers for short haul. Keep you busy year Round 60-70 hrs/week. Paying top $$ Hourly & per miles plus HST. Come home every day. Paying weekly direct deposit. Requirement Must have proof of experience minimum of 3 years as a AZ Diver Clean driving record. Able to cross border Canada/USA. Need to have Canadian passport/ Fast card or US Visa. If you have interest in this position and meet the stated requirement.

**Please submit your resume and drivers abstract or Call Raj @ 905-297-8985 Ext 101**
**Email: Info@casritransport.com/Fax: 905-297-8985**

## BUS SERVICE

**RAINBOW CHARTER SERVICE INC. (SCARBOROUGH)**

உங்கள் பயணத் தேவைகள் எதுவானாலும் அழையுங்கள்.

Please call or text me : **416.451.0055**

**info@rainbowcharterservice.ca**

## AZ DRIVERS WANTED

Experienced drivers wanted immediately (At least one year) for long & short run with in Canada. Full time. on call. SPS Transporation Private LTD.

**647.528.2224 / 647.830.4644**

## LAND FOR SALE

**9th Line and Main St. Stouffville**

Site plan approved for 12 townhouses

Asking $5.2M

**Contact: Gulshan Sharma** Broker

**416.321.6969**

HOMELIFE

**HOMELIFE GTA REALTY INC.** Brokerage*

5215 Finch Ave. E., #203, Toronto ON. M1S 0C2

*Independently Owned & Operated

## யோக சோதிடம்



கிரகப்பொருத்தம் பார்த்தல் சுபமுகூர்த்தம் கணித்தல்

சாதகக் குறிப்புக் கணித்தல் பலன் பார்த்தல்

தொடர்புகளுக்கு: 416.299.8361

wpm Property Management

Unit #210 – 80 Corporate Dr, Scarborough, ON, M1H 3G5

**Available for Rent**

Toronto – Eglinton/Victoria Park - Detached
(3+3 Brm +3Bath) [$4500/m]
Toronto – Eglinton/Victoria Park - Detached
(3 Brm +2Bath) [$3000/m]
Toronto – Markham/Mcnicoll - Bsmt
(2Brm +2Bath) [$1999]
Toronto – Pharmacy Ave/Ellesmere Red – Bsmt
(2Brm +1Bath) [$1850/m]
Toronto – Leslie/Sheppard - Condo
(1Brm +1Bath) [$2050/m]
Toronto – Middlefield/Finch - Detached
(3+1Brm +4Bath) [$3200/m]
Toronto – Warden/Kingston Rd - Detached
(3+1Brm +2Bath) [$3550/m]

**Available for Rent**

Toronto – Morningside/Morningview - Detached
(3Brm +2Bath) [$1800/m]
Ajax – Salem/Taunton - Bsmt
(2Brm +1Bath) [$1700/m]
Whitby– Hwy 412/ Dundas- Town House
(3+1Brm +3 Bath) [$3000/m]
Brock Beaverton – Simcoe St/Mara St- Detached
(4Brm +3 Bath) [$3000/m]
Bowmanville – Middle Rd/William Fair Rd- Bsmt
(2Brm + 1Bath) [$2000/m]
Markham – Kennedy/14th Ave- Condo Town House
(3Brm + 3Bath) [$2800/m]
Brampton – Sandlewood Parkway E/Bramalea - Detached
(3+ 1 Brm + 4Bath) [$3900/m]

**BUY / SELL/ LEASE / INVEST**

- வீடு ஒன்றை வாங்கி வாடகைக்கு விட்டு வருமானம் தேட விரும்புகிறீர்களா?
- வாடகைக்குக் கொடுக்கும்போது சரியானவர்களை எப்படி தேர்ந்தெடுத்துக் கொடுப்பது என்ற குழப்பம் அல்லது பயம் இருக்கிறதா?
- இப்போது வாழ்ந்துவரும் வீட்டில் இருந்தே கடன் பெற்று இன்னுமொரு வீட்டை எப்படித் தெரிவு செய்து வாங்குவது என்று அறிய விரும்புகிறீர்களா?
- வாடகைக்குக் கொடுத்திருக்கும் வீட்டின் வாடகைப் பிரச்சனைகளைக் கையாளத் தகுந்த நிறுவனத்தைத் தேடுகிறீர்களா?

**Real Estate & Property Management** துறையில் எனது 32 வருட அனுபவம் உங்களுக்குக் கைகொடுக்கும்.

**கரு கந்தையா - 416.616.7278 Watson Property Management - 416.284.9999**

We are managing Condos, Houses, Apartments in the area of
Toronto, Markham, Ajax, Whitby, Oshawa, Clarington, Brampton, Hamilton, Beaverton, Trenton, and Kingston.



# COOK & WORKING PARTNER WANTED

**Windsor ON, London ON, Milton ON** இல் புதிதாகத் திறக்கப்படவுள்ள **Restaurant**க்கு **Canadian, Srilankan, Italian, Indian** மற்றும் **Bakery**இல் சமையல் அனுபமுள்ளவர்கள் ஆர்வமிருந்தால் தொடர்புகொள்ளவும்.



சம்பளம் பேசித்தீர்மானிக்கலாம். தூரத்தில் இருந்து வருபவர்களுக்கு தங்கும் இடவசதி தேவை ஏற்பட்டால் ஒழுங்கு செய்து தரப்படும்.

அத்துடன் **Working partner** ஆக இணைய விரும்புபவர்களும், **Restaurant** ஐ வாடகைக்கு எடுத்து நடத்த விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு : **416.294.9677**


## நெல்லியடி...

11ஆம் பக்கத்தொடர்ச்சி

மாணவர்களின் கல்விக்காக வழங்குகின்றனர். தமது பிள்ளைகளின் பிறந்ததினத்தின் போது வைபவங்களுக்கான செலவைக் குறைத்து அப்பணத்தை மாணவர்களுக்கு உதவும் வகையில் பிரயோசப்படுத்துகின்றனர். மேலும், சிறுவர்கள் தமது கைச் செலவுக்காக வழங்கப்படும் பணத்தைச் சேமித்து தாய்நாட்டிலுள்ள பொருளாதார வளம் குறைந்த மாணவர்களின் கல்விக்கு அன்பளிப்பு செய்கின்றனர் என்பதையும் அறியும்போது உணர்ச்சிவசப்படாமல் இருக்க முடியவில்லை.

நெல்லியடி சமூக அறக்கொடை அமைப்பினூடாக உதவிபெற்று இன்று பெருந்தொகை மாணவர்களும் வாழ்வில் நல்ல நிலையை எய்தியுள்ளனர். அவர்களின் அனுபவப் பகிர்வுகளைக் கேட்கும்போது நாமும் கல்வியை திறம்படக் கற்று உயர்வடைய வேண்டும் எனும் உத்வேகம் ஏற்படுகின்றது. மேலும், நாமும் எதிர்காலத்தில் இவர்களைப் போலவே தன்னலமற்ற சமூகத் தொண்டுகளில் ஈடுபட வேண்டும் என்ற ஆர்வம் ஏற்படுகின்றது.
“தாமின்புறுவது உலகின்புறக் கண்டு
காமுறுவர் கற்றறிந்தார்” என்கிறார் வள்ளுவர். கற்றோர் தாம் பெற்ற கல்வி போன்று பிறரும் பெறுவதில் மகிழ்ச்சி காண்பர். அதுபோலவே பிரதிபலனை எதிர்பாராது கண்போன்ற கல்வியை அனைத்து மாணவரும் பெறவேண்டும் எனும் பரந்த மனப்பாங்குடன் தம் சேவையினை 7 வருடங்களுக்கும் மேலாக செய்துவரும் நெல்லியடி சமூக அறக்கொடை அமைப்பின் பணி அளப்பரியது.

ஆகவே, கல்வி ஒன்றே மனிதனின் வாழ்வை ஒளியேற்றக் கூடியது. எமது கல்வியை மழுங்கடிக்க நாம் இடந்தரலாகாது. விடாமுயற்சியுடன் கல்வியை திறம்படக் கற்று உயர்வடைவதுடன் எதிர்காலத்தில் நாமும் இவர்களைப் போலவே தன்னலமற்ற சேவையை சமூகத்திற்கு வழங்க முன்வர வேண்டும். நெல்லியடி சமூக அறக்கொடை அமைப்பினூடாகக் கல்விக்கான உதவியைப் பெற்றுவரும் மாணவர்களில் ஒருவராக என்றும் அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். எதிர்காலத்தில் இவர்களின் பணி சிறக்கவும் மேலும் பல புலமையாளர்கள் வறுமையை வென்று சாதனைப் புரியவும் எனது மனமார்ந்த வாழ்த்துகளைக் கூறி இறையருளை வேண்டுகின்றேன்.



# என்றும் இளமை

அமரர் நா. க. சிவராமலிங்கம் அவர்களின் நினைவாக இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.

இளமை நில்லாது, யாக்கை நிலையற்றது, பிறப்பு உண்டேல் இறப்பும் உண்டு.

பிறப்பு, வளர்ச்சி, பிணி, மூப்பு, சாக்காடு என்பன வாழ்க்கையின் வட்டம். பிறந்தன இறத்தல் இயற்கை. ஆனால் முதுமையை மற்றும் இறப்பினைத் தள்ளிப் போடலாம். எவ்வளவு வயதானாலும் இளமை குன்றாத பொலிவு சிலருக்குண்டு. சிறுவயதிலேயே கிழடு தட்டிப் போவோரும் உண்டு. முதுமையில் இளமை ஒரு வரப்பிரசாதம். அதனை எய்துவது எப்படி?

தோற்றப் பொலிவுக்கு உடற்கூறு மட்டும் காரணமன்று. மனநிலையும் அதற்குக் காரணமாகும். கவலையற்ற மனிதர்களின் இளமை நீடித்து நிற்கின்றது. கவலையினால் நரையும் மூப்பும் முன் கூட்டியே வந்து விடுகின்றன. மனம் என்பதுவும் உடற் கூறுகளின் இயக்கம் என்பதனால் மனநிலை பாதிக்கப்படும் போது உடல் நிலையும் பாதிக்கப்படுகின்றது. இளமை கைவிட்டு அகலும்போது மூப்பினால் இளமை போய் பிணி ஏற்பட்டு மரணிக்கின்ற நிலை வரும்போது உளமதில் இறைவனை நினைந்தால் கவலை குறையும் - அகலும்.

கடந்த கால நிகழ்ச்சிகளை மறந்து விட்டு நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் மட்டும் எண்ணுவதுதான் தனது இளமைப் பொலிவுக்கு காரணம் என்று எழுபந்தைந்து (75) வயது பிரெஞ்சு நடிகை கூறியுள்ளார். கடந்த காலமாகட்டும், நிகழ்காலமாகட்டும், எதிர்காலமாகட்டும் எதைப் பற்றியும் மனிதன் எண்ணாமல் இருப்பது இயலாத காரியம். நடந்துபோன விடயங்கள் நினைவில் இருந்துதான் வரும். செய்து கொண்டிருக்கும் காரியங்களில் கவனம் வைக்காமல் இருக்க முடியாது. எதிர்காலத்தைப் பற்றிய சிந்தனையும் ஏற்படத்தான் செய்யும். ஒன்றிலிருந்து மற்றொன்றாக விளைகின்ற செய்திகளே வாழ்வில் நிறைந்திருக்கும் போது சென்றதை நினைப்பதும் வருவதை எண்ணுவதும் நிகழ்வதில் கவனம் செலுத்துவது மன இயல்பு. எனவே நினைவை அழிப்பது இயலாதது. ஆனால் கவலையை விட்டொழிக்க வேண்டியது அவசியம்.

துன்பம் உறவரினும் செய்க துணிவு ஆற்றி
இன்பம் பயக்கும் வினை

ஒரு செயலை செய்யும்போது தமக்கு துன்பம் மிகுதியாக வந்தாலும் அதுபற்றித் தளராமல் முடிவில் இன்பம் தரும் செயலை மன உறுதியுடன் செய்தால் கவலை ஏற்படாது. காரியம் கைகூடும் என்பார் வள்ளுவர்.

கவலை என்று எடுத்துக் கொண்டால் சென்றது, நிகழ்வது, சேர்வது என்று முக்காலத்துக் கவலையையும் விட்டுவிட வேண்டுமென்பது பொருள். கவலையை விட்டுவிட்டால் உலகில் காரியங்கள் ஒழுங்காக நடைபெறுமா? என்ற கவலையும் எழத்தான் செய்கின்றது.

கவலை இரண்டு வகைப்படும். ஒன்று அறிவைப் பற்றிய கவலை. மற்றது உணர்ச்சியை பற்றிய கவலை. அறிவைப்பற்றிய கவலை தெளிவையும் திறமையையும் கொடுக்கும். உணர்ச்சியைப் பற்றிய கவலை சோர்வையும் தோல்வியையும் கொடுக்கும். எதிர்காலத்தைப் பற்றி சிந்திக்கும்



போது நம் இன்றைய செயல்களைச் செய்வதில் ஊக்கம் பிறக்கும். எனினும் எதிர்காலம் எப்படி இருக்குமோ என்ற ஐயமும் அச்சமும் நம்மை அயரச் செய்து விடும். எனவே கவலை என்று எடுத்துக் கொண்டால் பழைய கவலை, புதிய கவலை என்று எல்லாக் கவலையையும் தொலைத்து தலைமுழுக வேண்டியதுதான். நமது அனுபவமாக பழைய நினைவுகளும் அறிவில் ஒளிர்கின்ற காட்சிகளாக எதிர்கால எண்ணங்களும் அமைவது நிகழ்காலத்தில் நமது செயல்களுக்கு வேண்டிய சக்தியை வழங்கும்.

நடந்து போனதை நம்மால் மாற்ற முடியாததைப் போன்று எதிர்காலத்தையும் நம்மால் கட்டளை யிட முடியாது. எதிர்காலம் என்பது கணக்கிற்கு வராத விடயம். 'நெருநல் உளன் ஒருவன் இன்றில்லை' என்பதற்கேற்ப தொடந்தும் வாழ்வு நமக்கிருக்கின்றது என்பதை யாரும் உறுதி கூறுவதற்கில்லை. எனவே நிகழ்ந்து கொண்டிருக்கின்ற இந்த விநாடிதான் நமக்கு சொந்தம். நமது என்று கருதும் காலத்தில் நல்ல செயலைச் செய்ய வேண்டும். அதற்குப் பழைய நினைவு, அனுபவம் ஆற்றலாக அமைகின்றது. தொடர்ந்தும் உயிர் வாழ வேண்டிய நிலை ஏற்பட்டால் செயல் அறிவுசார்ந்ததாக அமைந்தால் அது செம்மையானதாக இருக்கும்.

இதுதான் நடக்குமென்றோ இது நடக்கக் கூடாது என்றோ நிச்சயமில்லை. எனவே வீணாகக் கவலைப்பட்டு ஆகப்போவது ஒன்றுமில்லை. உடலுக்கும், உள்ளத்திற்கும், உயிருக்கும் தொல்லை தராமல் இந்த நிமிடத்தை இன்பமுடையதாகச் செய்துகொள்ளும் பாங்கு ஒருவருக்கு இருந்து விட்டால் அதைவிட ஞான நிலை வேறில்லை. மாறாத இளமைக்கு அதுவே காயகல்பம்.

- நா.க. சிவராமலிங்கம்

சித்திரை மாதம் 1ஆம் திகதி என் தாத்தாவின் பிறந்த நாள். இன்று அவரின் நினைவாக இக்கவிதையை எழுதுறேன்.

## பிறந்தநாள்



இன்று உங்கள் பிறந்தநாள்
இது ஓர் இனிய நாள்
வாழ்க்கையில் மறக்காத நாள்
கேக் வெட்டிக் கொண்டாடும் நாள்

ஒவ்வொரு வருடமும் இன்று
மகிழ்ச்சியாய் இருப்போம்
ஆனால் இந்த வருடம் நாம்
துயரத்தில் ஆழ்ந்திருக்கிறோம்

பிறந்தநாள் கொண்டாடிய தினங்கள்
நம் நினைவுகளில் இருக்கும்
உங்கள் அன்பு மற்றும் சேவை
இந்த உலகத்தை மாற்றும்

என்றும் என் நினைவுகளில்
என் அன்புத் தாத்தா

அன்புப் பேத்தி,
லக்சனா சிவகுமார்

## தமிழின்...

12ஆம் பக்கத்தொடர்ச்சி

எழுதியிருக்கிறோம் என்று' ஆனால், நீங்கள் எப்போதுமே நாடகங்கள் தான் எழுதிக் கொண்டு வருகிறீர்கள்" என்று சொன்னார். என்னுடைய கதைகளில் வசனங்கள் அதிகமாக இருப்பதுதான் அவர் இப்படி சொன்னதற்குக் காரணம். அவர் சொன்னவற்றின் அடிப்படையில் பார்த்தால் சிறுவயதில் ஆங்கர் ஏய்ட்டின் நாடகங்களை நிறைய விரும்பி படித்தது, உள்ளே பதிந்து, இதற்கு ஒரு காரணமாக இருக்கலாம் என்று தோன்றியது. ஆனால், குறிப்பாக இதுதான் காரணம் என்று சொல்லிவிட முடியுமா தெரியவில்லை. தஞ்சாவூர் பகுதியில் வளர்ந்தது இன்னொரு காரணமாக இருக்கலாம். அங்கே நிறையப்



பேசுவார்கள். ஆனால், நான் அதிகம் பேசமாட்டேன் என்பது வேறு விஷயம்.

அடுத்த இதழிலும் தொடரும்;

## படித்ததில் பிடித்தது



நீங்கள் வாசித்து மகிழ்ந்ததை மற்றவர்களும் வாசிக்கட்டுமே.
அனுப்புங்கள் Vlambaram@sympatio.ca
யாம் பெற்ற இன்பம் மற்றவர்களும் பெறட்டுமே!


- சிவகுமார் -

ஒரு குடும்பத்தில் இருந்த கணவனும், மனைவியும் தங்களுடைய மகனை சிரத்தையுடன் வளர்த்தனர். மகனும் பெற்றோருடைய கஷ்டத்தை உணர்ந்து சிறப்பாகப் படித்து நல்ல ஒரு வேலையில் சேர்ந்தான். அவன் தன்னுடைய முதல் மாதச் சம்பளத்தை வாங்கி வந்து தாயிடம் கொடுத்தான்.

அதற்கு அவனுடைய தாய், "இத்தனை நாளும் உன்னை கஷ்டப்பட்டு வளர்த்து ஆளாக்கி, எல்லாச் செலவையும் செய்த உன் தந்தையிடம் போய் சம்பளத்தைக் கொடு" என்றாள். அதற்கு அவனோ முடியாது என்று மறுத்து விட்டான். தாயானவள் மீண்டும் அவனிடம் பணத்தை தந்தையிடம் கொடு என்று சொல்லியும் அவன் கேட்காததால், அவனுடைய கன்னத்தில் ஓங்கி ஓர் அடி விட்டாள்.

"பணத்தை அப்பாவிடம் போய்க்கொடு, என்று எவ்வளவு சொல்லியும் கேட்காமல் ஏன் இப்படி அடம் பிடிக்கிறாய்" என்றாள் தாய்.

அதற்கு அவன், "அம்மா! ஒவ்வொரு முறையும் தந்தையிடம் நான் பணம் வாங்கும்போதும் அவருடைய கை மேலே இருக்கும், என்னுடைய கை கீழே இருக்கும். ஆனால் இப்போது நான் அவரிடம் சம்பளப் பணத்தைக் கொடுக்கும்போது அவருடைய கை கீழேயும், என்னுடைய கை மேலேயும் அல்லவா இருக்கும். அதனால்தான் இப்படி நடந்து கொண்டேன்" என்றான்.



இதை உள்ளறையில் இருந்து கேட்டுக் கொண்டிருந்த அவனது தந்தை ஓடிவந்து அவனைக் கட்டிப்பிடித்து முத்தமிட்டார்.

'மகன் தந்தைக்குச் செய்யும் உதவி அவன் உள்ளம் குளிர நடந்து கொள்வதைத் தவிர வேறு என்ன இருக்க முடியும். - படித்து கண் கலங்கியது.



# A New Project by

TRIDEL
BUILT FOR LIFE

## @ 60 Queen St. East, Toronto
## (Queen + Church)



- 57 Storeys
- 445 Units
- 2 Blocks East of Yange Street
- Height 60Ft. (185.9m)

Developers : TRIDEL & BAZIS
Architect : Core Architect

*For More information Feel Free to Call .....*

HOMELIFE
HIGHER STANDARDS

**HomeLife/GTA Realty Inc.** Brokerage*
5215 Finch Ave. E. Suite 203, Toronto, ON. M1S OC2
**Tel: 416-321-6969**
* Independently owned and operated.













# 83 - திரைவிமர்சனம்



ஆரணி ஞானநாயகன்

1983இல் இந்திய தேசியத் துடுப்பாட்ட அணி உலகக் கிண்ண விளையாட்டுப் போட்டியில் பங்குபெறச் சென்றபோது இந்தியா அதற்கு முன்னர் ஒருமுறை மட்டுமே உலகக் கிண்ண விளையாட்டில் ஓர் ஆட்டத்தில் வென்றிருந்தது. ஆனால், 1983இல் இந்திய அணியின் தலைவன் கபில்தேவ் இம்முறை இந்தியா ஒருசில போட்டிகளில் மட்டும் வெல்வதைத் தனது குறிக்கோளாகக் கருதவில்லை. முழுப் போட்டித் தொடரையுமே வென்று இந்தியாவிற்காக உலகக் கிண்ணத்தைப் பெறவேண்டும் என விரும்பினார்.



கபில்தேவின் தலைமையில் விளையாடிய 1983ஆம் ஆண்டின் இந்தியத் துடுப்பாட்ட அணியினைப் பற்றிய இந்திப் படம்தான் 83. ரன்வீர் சிங் கபில்தேவாகவும் ஜீவா கிருண்மாச்சாரி ஸ்ரீகாந்தாகவும் மற்றும் பலர் துடுப்பாட்ட வீரர்களாகவும் இதில் நடித்துள்ளனர். 83 படம் தமிழிலும் வெளியானது. இப்படம் டிசம்பர் 2021இல் வெளியானது.




கபில்தேவும் அணியும் இலண்டனுக்கு வந்துசேரும்போதே அவர்களது திரும்பிப் போகும் பயணத்தின் விமானச் சீட்டுகள் உலகக் கிண்ண இறுதிப்போட்டிகள் முடியும் முன்னரே பதியப்பட்டுள்ளன. இதிலிருந்தே இந்திய அணியின் நிலை அவர்களுக்குத் தெரிகிறது. இந்திய, பிரித்தானிய அதிகாரிகள் மற்றும் ஊடக வியலாளர் உட்பட அனைவரும் இந்தியத் துடுப்பாட்டக்குழுவை மதிக்கவில்லை. அவர்கள் உலகக் கிண்ணம் வெல்வார்கள் என நம்பவும் இல்லை.

கபில்தேவோ தாங்கள் உலகக் கிண்ணத்தை வெல்வதற்காகவே வந்தோம் என உறுதியாக ஊடகங்களுக்குப் பதில் அளிக்கிறார். ஒவ்வொரு போட்டியையும் இந்தியா தமது முயற்சியால் வெல்லும் போது ஊடகவியலாளர் உட்பட பலர் அவர்கள் அதிர்ஷ்டவசமாகவே வெல்லு கின்றனர் எனக் கூறுகின்றனர். இது உண்மையா என அறிய இப்படத்தைப் பாருங்கள்.

ரன்வீர் உட்பட அணியில் இருந்த அனைவரும் துடுப்பாட்டப் பயிற்சி செய்ததுடன், தமது உண்மையான பாத்திரம் போலவே காட்சி அளித்தனர். சில காட்சிகளில் நடிகர்களும் உண்மை யான அணியின் படங்களும் கலந்து வருவதால் இந்த ஒற்றுமைகளைக் காணக் கூடியதாக இருந்தது.

இருந்தாலும் இது ஒரு விவரண சித்திரம் (Documentary) இல்லை. இது ஒரு பொழுதுபோக்குப் படம் என்பதால் சில காட்சிகள் மிகைப்படுத்தப்பட்டுள்ளன. கதா பாத்திரங்களை இயல்பாகவே நடிக்க விட்டிருந்தால் படத்தின் தன்னம்பிக்கை, தேசாபிமானம் என்ற கருத்துகள் மிகைப் படுத்தப்படாமலேயே நன்றாக உணர்த்தி யிருக்க முடியும்.

அணியின் ஒரே ஒரு தமிழரான ஸ்ரீகாந்தை வைத்து நகைச்சுவைக் காட்சிகளை சேர்த்தது இந்த நீண்ட படத்திற்கு தேவை யில்லை. இருந்தும் ஜீவாவுக்கு இப் படத்தில் ஆங்கிலேய ஊடகவியலாளரை எதிர்த்துப் பேசும் நல்ல காட்சி ஒன்று அளிக்கப்பட்டுள்ளது.

கபிலின் மனைவியாக தீபிகா படுகோனும் மற்ற வீரர்களின் மனைவிகளையும் படத்தில் பெயருக்காக மட்டுமே சேர்க்கப் பட்டு நடிக்க வைத்து இருக்கின்றனர் என்று தோன்றுகிறது. அவர்கள் துடுப் பாட்ட வீரர்களுடன் இருப்பது ஒரு பலமோ அல்லது பலவீனமோ என்று படத்தில் காட்டப்படவில்லை. ஆனால், கபில்தேவின் தாயின் அறிவுரை அவருக்குப் பலமாக இருந்தது என்று காட்டப்பட்டுள்ளது.

சில காட்சிகள் மிகைப்படுத்தப்பட்டன எனத் தோன்றினாலும், அவை உண்மை யில் நடந்தவை. இதற்கு கபில்தேவ் உலகச் சாதனை செய்த காட்சி ஓர் உதாரணம். படத்தின் இறுதி ஆட்டமும் நன்றாக எடுக்கப்பட்டுள்ளது. துடுப்பாட்ட விளையாட்டை உண்மையாகப் பார்ப்பது போல இருந்தது. எனவே இந்திய துடுப்பாட்ட வரலாற்றை மாற்றிய இந்த நிகழ்ச்சியைப் பற்றிய அறிய விரும்பு வோரும், அதை மீண்டும் அனுபவிக்க விரும்புவோரும் இப்படத்தைப் பார்க்கலாம்.

# கலங்கிய குளம்

விளிம்புநிலை வியர்வைகளின்
தலையில் வைக்கோல் சும்மாடு
மண் குடம்
மார்பு திறந்த மேனியர்
இடை அசையும் நடையழகில்
குளத்திலிருந்து குடிநீர்
சுமந்து வருகின்றனர்.

கையில் வளையல்
கழுத்தில் அணிகலன்கள்
காலில் செருப்பு குடை
உடல் மறைக்கும் உடைகள்
குங்குமப் பொட்டு
சோற்றில் ஊற்றும் நெய் நுகர்வுகளுக்கு
தடைபோட்டிருந்த உயர்ந்த கோபுரங்கள்

பனை ஓலைக் கூரைக்கொட்டிலுக்குள்
வெற்றுநிலத்தில் வாழ்க்கை, உறக்கம்.
மழிக்காத முகத்து மயிர்
அரையிலிருந்து முழங்கால்வரை
சிற்றாடை
ஆண்கள் கோவணம்
தலையில் சுற்றிய துணித்துண்டு.

வயிற்றைக் கழுவுகின்ற கஞ்சிதான்
கூலியென உழைத்துக்கொடுத்த
மக்கள்மீது
அடி உதை பொய்வழக்கு
வன்புணர்வு கொலை



உயிருடன் குடிசைகளை எரித்தல்,
ஆணவக்கொலை கௌரவக்கொலை,
எல்லாம் சேர்ந்த தமிழ் இனத்தின்
ஜனநாயக விடிவுநிலை எக்காலம்?

முத்துராஜா

